ஸ்ரீ

கடவுள் துணை.

மனுநீதிகாதல்.

இஃது,

ஆத்தங்கரையென்று வழங்குகின்ற

துறைமாநகர் சாமிநாதப்பிள்ளையென்னும்

தெய்வச்சிலையாபிள்ளையவர்கள்

இயற்றப்பட்டு.

மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

——(*)——

சென்னை இட்டா

பார்த்தசாரதிநாயுடு.

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 1- திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன்பேட்டை.

MADRAS.

1899.

[illegible]

உ

கடவுள் துணை.

மனுநீதிகாதல்.

காப்புகள்

விநாயகர் துதி

வெண்பா

யானைமுகவானையுமையாளனூர்பாலகனே
ஞானமுதலான குருநாதனே-மானிலத்தில்
ஆதிமனு நூலிலுரையாதவனையானுமொரு
காலலெனவோதவருள்காண்

இதுவுமது

புத்திவருமெஞ்ஞானப்போதமுறும்புண்ணியமும்
சத்தியமாமேன்மைமிகத்தங்குமேநித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியில்சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால்நிதம் உ

சரஸ்வதி துதி

பூமேவுலோகம்புகழுமனுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற்பயனறிந்துயான்பாட
மூலகணேசன்முளறிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென்வாக்கிலிருந்தருள்வீர்

அவையடக்கம்

வேதமுறைசொன்னதிந்தமேதினியிலுள்ளமனு
நீதிமுறைதன்னைநிகழ்த்தினூர்முனனோர்கள்
வள்ளுவனரெளவைமுதல்வழுத்துமனுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற்சிற்றகப்பைமுகந்தாற்போல்
மாலைசதகமனுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞர்நவின்றூர்பலநூலால்

பண்ணும்பலநூலிற்பாடும்பொருளதனை
எண்ணியெந்தன்சிந்தைக்கிசைந்தேயறிந்தமட்டும்
ஞாலமதினுதிரும்சுவமணியெலாம்பொருக்கி
மாலையாய்க்கோர்த்தவகையாகவிந்நூலை
காதலுடனியானுமொருகாதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின்வல்லோர்மணமகிழ

ஆக்கியோன்பெயர்

மாவளஞ்சேர்செம்பிவளவாடன்மிக்கான
பூவைசியனென்னும்புகழ்படைத்தகங்கைகுலன்
ஆதிவையைசங்குமுகமாறைந்தான்ராம
நாதவேள்பாலன்நளினகவிரஞ்சிதவான்
சீலமிகுமமுர்தச்செந்தமிழின்பாவினஞ்சொல்
டாலோனருள்சிறந்தமாபாரதப்பிரசங்கன்
கையுற்றநெல்லிக்கனிபோலயறியவென்று
தெய்வச்சிலையானுரைத்ததெள்ளமிர்தமாமிதுவே
உற்றதொருகாவேரியொன்றாய்ப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற்சேர்ந்தங்கேயோடுதல்போல
சந்திரனோடம்பரத்திற்றாரகைகள்வாழ்வதுபோல
செந்தமிழிழோர்முன்னேசிறியேனுரைத்ததமிழ்
புன்சொற்குதலையுங்கள்பிள்ளைமொழிபோல்மகிழ்ந்து
என்னசொலிதனைநிதமின்பமெனக்கொண்டருள்வீர்

நூற்பயன்

சத்தியசத்தியமுஞ்சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதாமங்களுதவியுதவாமை
தன்மனைவிமைந்தரொடுதேகமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசையர்கள்பேதத்துள்ளாவதுவும்
மானமீனம்வாழ்வுமகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ரதாபம்பரிமளித்தல்
துற்பிறவிற்சனர்கள்சேரமுடனுக்கிணைகள்
நற்பிறவியாயுள்விர்த்திநற்பதங்கள்நல்லறிவு
கற்பனைகளொப்பனைகள்கயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மையென்றநடவாமை

காலத்தின்கற்பங்கள்கடவுளால்நிர்நயங்கள்
ஞாலமதில்நன்றியுடனற்றவர்பத்திமுத்தி
சிதேவிமூதேவிசேரிடங்கள்தானுமனு
நீதிமுறைவறுமைநிச்சயமாய்சேரிடங்கள்
சேராவிடம்லோபிசின்னத்தின்பாங்குகளும்
பேரானமாதாபிதாவவர்களாவதுவும்
இருந்துமிருந்தோர்களிறந்துமிறவாதார்
மருந்துதவும்பண்டிதத்தின்மார்க்கமனத்தூக்கம்
சுத்தமசுத்தங்கள்தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிதுமெலியதானங்கொடுத்து
மிஞ்சுங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர்மாறாதபேறுபெற்றோர்
இத்தகைமையாவதுடனின்னமின்னம்பலதாய்
சுத்தமுடன்முன்னாலோர்சொன்னபடியேயுரைத்தேன்
நன்னயஞ்சேரின்நூலைஞாலமெல்லாந்தானறியச்
சொன்னதொருபாடற்றொகையுமோராயிரமாம்
பாடினேனிந்நூலைப்பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோனல்லறிவிக்கின்னமொருநூலுளதோ

வேதியரொழுக்கம்

ஆரணங்களோதுவதும்யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால்வினையெகாந்தீர்ப்பதுவும்
கல்லும்பிருதிமிக்கானமரந்தாம்பூலம
நல்லாச்சுலையுமருளெய்தும்படிமுடித்தால்
ன்னயமாய்மாரிபெய்துநாடுசெழிப்பதுவும்
மன்னர்செங்கோலுமறையோர்மகிமையன்றோ

அரசரொழுக்கம்

தேசத்தியற்கைதெரிந்தமனுநீதி
வாசற்பிறதானிவாய்மைகுறிப்பறிதல்
தன்னுயிர்போல்மன்னுயிரைத்தற்காத்தல்சத்தியமாம்
மன்னுங்குடிகளிலேலமாறாவபிமானம்
வங்கிஷத்திலுள்ளோர்மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத்தாராதரமாய்க்காப்பதுவும்

காலமிடமறிதல்மிக்கானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ரதாபம்பரிமளித்தல்

தேவதாபத்தியுடன்சிட்டர்பரிபாலனமும்
மேலவராந்துஷ்டர்களைவிரைந்தடக்குமாக்கினையும்

மரசனங்கள்மீதிலபிமானந்துபன்னான்கும்
ராசநீதத்தினலமென்றுரைத்திடுமோம்

வர்த்தகரொழுக்கம்

தானறிந்தவாபமுந்தப்பாநிறைவசன
மானவராதாயத்துக்கதிகஞ்சிலவழியார்

கணக்கிலணுவும்விடார்காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வாரிசைவார்க்கிசைவார்கள்

பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கானவணிகர்குலமார்க்கமிதாம்

மறையோர்க்குமங்களமுமன்னவர்க்கும்வல்லபமும்
குறையாதவர்த்தகர்கள்கொள்வினையும்விற்பனையும்

வேளாளரொழுக்கம்

ஆகமவேதங்கள்தேவாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும்வேந்தர்கள்செங்கோன்முறையும்

பாரிலேதர்மபரிபாலனங்கள்மேலுமுயர்
சூரவலுவுத்தொழிலாளர்சீவனமும்

தாளாதகீர்த்தியுடன்றாரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களதுமேழிபெருமையன்றோ

தருமநீதி

அறத்திற்பெரிதுமில்லையதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றிமற்றுமுயர்கேடுளதோ
தர்மாதர்மம்ரெண்டுஞ்சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமுபனுபவித்துத்தீருமன்றோ
எண்ணும்பலபொருளுமிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும்போவதில்லையுன்னைவிட்டு
பொன்னுடையாபரணப்பூதானமீந்தாலும்
அன்னதானத்துக்கதிகமுறுதானமுண்டோ
தன்னார்சுயமாயோர்தர்மந்தொடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தைமுக்யஞ்செய்தலுத்தமமாம்

பாவபுண்ணியமிரண்டும்பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்தபுண்ணியமும்பாவமுமாம்
கோணுதனுவளவுங்குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவிமறமென்றுசொல்லுவதாம்
உண்ணறியவாழ்வுமெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல்புனல்நிறைந்தகாடாகும்
ஏதாகிலுந்தர்மமெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுககிசைந்தபடியேகொடுத்து
வாக்குச்சரீரமதனுற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க்கிகபரம்வந்தெய்திடுமே
எத்தர்மமானதற்குமிடையூறுசெய்பவர்கள்
புத்திருமத்தியமாய்போவார்நகரமதில்
மன்னருளநீதமதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னமின்னமுண்டுபதின்மூன்றுரைப்பார்
சேனைகுடியுஞ்சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மையதனுடனேயிவ்வாறும்
மிச்சமறிவீகைமேலுந்தயிரியமும்
உச்சாகமென்பதுடனேயிவைநான்கும்
தூங்காண்மைகல்விதுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும்நிலமாளரசருக்கு
யானைகுதிரைபடையானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்மமதினினைவுடனேயிம்மூன்றும்
ஏழைக்கிரங்கியெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீரவிசாரித்துத்தெண்டனையும்
தக்கமரியாதைதயவுங்குடியினிமேல
இக்குணங்களெல்லாமிருக்குமந்தராசாவை
ராசசிங்கமென்பரிவர்நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வறுமைவாராதென்றேயுரைத்தார்
தான்செய்யுந்தர்மந்தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தையபகரித்துககொண்டாக்கால்
துன்னடக்கையென்றுமகாதோஷம்வந்துசூழுமென்று
நின்மலவாமென்றுநிகழ்த்தினர்முந்நூலே

ஆலரசுவேம்பிதயூன்றனதிலையொவ்வொன்று
மேலும்விலாகெலவிவில்வமதில்முப்மூன்றும்
அன்பாகதெங்குமாமைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீதொன்பனையும்வைத்தவர்க்கு
தரணியிலேயெந்நாளுந்தக்கபுகழ்விளங்கும்
நகரமிவர்க்கில்லையென்றுநவின்றார்மனுநூலில்

அன்னைதந்தைசுற்றங்களாதியிலேநம்பினர்
முன்னுதவிசெய்தவர்கள்மிடிமையுற்றுவந்தவர்கள்
தக்கபெரியோர்கள்சரணமென்றடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள்மேனாளிற்சேவகரை
கைநழுவச்செய்யாமற்காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும்வம்மிசமும்விர்த்தியுண்டாம்

தன்உயிர்போல்மன்னுயிரைதற்காக்கஉத்தமாக்கு
என்னென்னபாவம்போமிகபரம்வந்தெய்திடுமே
மாமறையோரேமுதலாய்மற்றுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய்தேய்ப்பவர்கள்தங்களுக்கும்
மறையோர்க்குத்தொண்டுசெய்வோமாதாவைத்தெய்வமென்பே
கறவைதனைக்கண்டவுடன்கையாற்சொரிபவாக்கும்

எண்ணுமற்கோடிஎக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்றுபுகன்றார்மனுநூலில்
துன்மார்க்கர்தங்குடியைச்சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசிலநற்குடியைக்காத்திடலாம்
அறக்குடிபத்தானாலுமவர்கடனைக்கெடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச்சீர்திருத்திக்காத்திடலாம்

வீடானபட்டணத்தைமிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்கலாகுமதிற்பாவமில்லை
என்றுமுன்னாள்மாயவனுமேயரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவர்க்குக்கூயைதிவ்வாறுகும்
தீபமொன்றுலட்சந்திரிகொளுத்தினுமந்தத்
தீபங்குறையாதசெய்கைபோலெந்நாளும்

தலமீதிலோயாத்தான்தருமஞ்செய்தவாக்கு
மலர்மாதாலுண்டாகும்வாழ்வதுவுங்குன்றாது

நன்மையேதர்மமதினாலேவரும்வாழ்வு
துன்மைவருவதில்லை தூயமனே துன்றாது

துன்மைதர்மத்தாற்றுலங்கும்பெறுவாழ்வு
நன்மைதாமாட்டாதுநல்விர்த்தியாகாது

தர்மம்பொருள்கிடைத்ததற்காலஞ்செய்யனென்று
வர்மைவந்தால்தர்மமதுசெய்யக்கூடாதே

காய்பழங்கள்பூவிலைகள்கதித்தமரங்களிலே
வாய்வுசென்றால்நற்கனிகள்மட்டுமுதிராமல்

தக்கபழங்காய்பூகளிர்முதலாயுதிரும்
பக்குவம்போற்கெற்பமுதற்பயந்தமனுக்களிலே

சாலக்கிழவர்மட்டுஞ்சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சாவதில்லையாக்குமென்றெண்ணவொண்ணா

என்னவயதானாலுமிபல்புருவம்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய்தாயிதுவேயுத்தமமாம்

பண்டுசெய்தபுண்ணியமும்பாவமென்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமனுபவிப்பாரெக்காலமானாலும் ௧௰

நமக்குள்ளதைச்சமைத்துநான்முண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்றதர்மமேமுக்கியமாம்

வாசற்கதவடைத்துவைத்துண்பாற்குற்சொர்க்க
வாசற்கதவுமாறாதடைந்திருக்கும

உப்பிலாங்கூழுமுளமகிழ்ந்துதான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்தமொங்குமுன்னோர்கள்

பகைவன்கொடுங்கோபிபாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சுநஞ்சுக்கெட்டிக்காய்கொப்பிடலாம்

ஓட்டைக்குடத்திலிட்டவுதகம்போனாற்போல
காட்டமுடனேவாழ்வுநாளுக்குநாள்குறையும்

கூடிவருங்காலங்குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங்கொடுத்தாரேயாமாகில்

வாணாளேபோகும்வழியடைக்குங்கல்லென்று
கோணாதவாய்மைகுறளிலேசொன்னாரே

ஆறிலொருகடமையாசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்றதெய்வம்விதிதமக்காம்

இல்லறத்தில்வாழ்ந்தாலிவ்வாறுசெய்பவென்று
வல்லமைசேர்வேதமுறைவள்ளுவருஞ்சொன்னரே

பாவத்தாற்பொன்றேடிப்பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்களெள்ளளவும்மாராதே

தாமத்தாற்றேடித்தராதரமுங்கண்டறிந்து
தன்மையுடனவந்தோர்தமக்குவிருந்தளித்து

இன்னம்வரும்விருந்துக்கெதிர்ப்பார்த்திருக்கின்ற
நன்னயவான்வீடந்தலட்சுமியின்வீடாகும்

பூமியிலேவித்தேறும்போட்டதேபுண்டானல்
தாமேதானைஸ்வரியந்தன்னலேகூடிவரும்

ஏற்போர்களாறேனுமெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாகத்தமமாலேகூடுமெட்டுமீந்தாக்கால்

இருந்தாலிறந்தாலுமெய்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம்புகழதிகவாழ்வுமுண்டாம்

தர்மங்களாவதுதான்தர்மவான்மெய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதெக்காலமுந்தான்செயயானும்

எத்தர்மமானாலுமீகைக்கிணையில்லை
மற்றெல்லாம்பின்னென்றுமனுநீதியிலுரைத்தார்

மாரிச்சிறப்பு.

பண்ணிலுறுதவங்கள்மாதானமற்றுளதும்
விண்ணின்றுபோனல்விழலாகும்வாரிமுதல்

வாரிவளமுமானிலத்திற்புற்பூடுஞ்
சீர்பெருந்தானவந்தேவாலயச்சிறப்பும்

மன்னர்முதலானவர்கள்வாழ்வுமவர்தாழ்வும்
மன்னுமுயர்வானமதில்மாரிவளமாமன்றோ

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகனவேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக்கிணையாவதொன்றுமில்லை

மூர்த்தியென்றமூவருக்கும்முன்னுளிறந்தவற்கும்
பார்த்திபற்குந்துறந்தாபலமுயர்ச்சியாளருக்கும்

இயல்பினுலிவ்வாரிவர்க்குத்துணையெனவும்
நயவாகுமென்றுகுறளானதிலேசொல்லினரே

மட்டில்லாவாழ்விருந்தென்மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதியென்பவளேமுன்னிலையாம்

சற்குணமூர்தெய்வபக்திகர்மசிந்தைகற்புடமை
இக்குணமுள்ளாளேயிருக்குமந்தவீட்டினிலே

வற்றாதுசெலவமவள்வாயால்மாரீபெய்யென்று
உத்தாரஞ்சொன்னாலுலகமெல்லாமாரிபெய்யும்

தானுமனையாளுமொருதர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்டதர்மமதுதர்மமல்ல

செல்வநிலையாமை.

நினைத்தபொருள்நீங்கினையாய்பொருளெய்து
மனைத்துமதுதானேயப்படியும்ப ந்துவிடும்

நிலையாகத்தோற்றுகின்றநிலவதுவும்போயிருளாம்
கனஞ்சேரிருள்நிலவாய்க்காட்டுதற்கப்பாலும்

இரவும்பகலாகும்பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கேபேராறாயாகிவிடும் ௱௨௰

ஆறதுவுமேடாகுமணல்நிலத்திலோடம்வரும்
வாரிசுவறியதில்மணலுமிகச்சூடாகும்

வேண்டுநிதியோரெளியோருமாவார்கள்
மீண்டுவெளியோருமேலோருமாவார்கள்

தக்கமைசெறிவாழ்வுந்தாழ்வும்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந்தாழ்வதுவும்வாழ்வதுவும்

தெய்வச்செயல்

பேராசையாலேபிரயாசைப்பட்டாலும்
வாராதுவாராதுவருவதுவும்போகாது

எங்கெங்கேபோனாலுமியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப்பலரைமிகநொந்தாலும்

அழுதுதொழுதாலும்அனேகநாள்தெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும்பயனேருமெய்தாதே

ஆழக்கடலிலமுக்கமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலேநானாழிநீர்வருமோ

பூர்க்குமரஞ்செடிகள்பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றியாசையினல்வாராதே

ஆலிற்புருவிரண்டங்கிருக்கவோர்வேடன்
சீலமுட னெய்வதற்குச்சிலையிற்கணைதொடுக்க

பாயவந்தராஜாளிப்பட்சியதுமேலுலவத்
தூயபுருவின்மேற்றொடுத்தகணைவிலகி க௫

ராசாளிப்பட்சியுடலானதிலேதைத்துவிழப்
பாசமுறுவேடனபதத்தில்விஷந்தீண்ட

வேடனும்ராஜாளியுமாய்வீழ்ந்துவிடவேயொரு
சோடாய்ப்புருவிரண்டுந்துன்பமற்றுவாழ்ந்ததுவே

இத்தகமையாய்முடியுமீசன்செயலாலதற்கு
அத்தாட்சியாவென்றருளினும்முன்னூலோர்

அண்டரமுதுண்ணவரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்துகோதைதனைப்பிரிந்தான்

வேதன்சிரமிழந்துமிப்பார்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனுமங்கமெலாங்கண்ணானான்

சக்கிரேசனைவரிச்சந்திரனும்பெண்டிரும்
மிக்கதொருநாடிழந்துவிலைப்பட்டுத்துன்பமுற்றார்

மனனுநளராசன்மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்துதன்வடிவுகுன்றினனே

ஐவரடவியுற்றராகையாலாரேனும்
வெய்யோனவிதிதனையேவெல்லவெவரால்முடியும்

பூபாரந்தீர்த்தபுயல்வண்ணன்வேடன்கை
ஆபரணம்பட்டுழன்றுவாதைக்குள்ளாகினனும்

ஆனைபறவையுடனுடரவமிம்மூன்றும்
சேனைமனிதற்கையிற்சிக்கிமெலிவதுவும் ௨௰

நல்லகதிர்மதிகள்ராகுகேதாற்றுயருறலும
வல்லதர்மவானுக்குறுமைவந்துசூழுவதும்

பாக்கியமுள்ளானுக்கோர்பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப்புத்திரருண்டாவதுவும்

நல்லோர்க்குப்பொல்லாதலண்டப்பெண்டாவதூவும்
பொல்லார்க்குநல்லகுணப்பெண்மனைவியாவதுவும்

ஓரொன்பதொன்பதிதுவூழிவிதிப்பயனும்
வீரர்க்குமேலவர்க்குமின்பதுன்பஞ்சமனும்

ஆகாச்செயலுக்குமபலாபொருள்தனக்கும்
வாகாகவாசைமிகவைத்தால்வருவதில்லை

வாழ்வதுவுந்தாழ்வதுவுமன்றுவரும்நின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றியுத்திபுத்தியாலாமோ

ஏலவேவந்திதுபோமின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னுமிவைரண்டுமனுபவிப்பார்

காலித்திரளிலொருகன்றனைவிடுத்தால்
யாலித்தேயீன்றபசுவறிந்துசேருதல்போல்

ஓடியொளித்தாலுமங்குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்றுசெப்பினார்முன்னோர்கள்

எக்காலஞ்சென்றாலுமிறவாதபேரில்லை
மிக்கவிதிவசத்தைவெல்பவாகளாருமில்லை

சுகபோசனம்

காளாண்மையென்னுந்தகைமைகளைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிகமில்லையென்றுசொல்லினரே

வேந்தர்தமையடுத்தோர்வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள்தன்னருகில்சஞ்சரிப்போர்

மருவாருஞ்சந்தனமாம்வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்களாவின்பாலுள்ளவாகள்

சகடுடையாக்கிரைதன்னைப்பயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்குமேலானபஞ்சமில்லை

நற்சகோதரர்துற்சகோதரர்

தம்பியர்மேலன்புடையோன்தர்மராமர்
தம்பிமேல்சத்ராதிதசக்ரீவன்வாலியுமாம்

நற்றுணையாந்தம்பியர்கள்லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்மனுடன்பிறந்தநால்வர்களாம்

சுக்ரீபனுனவனுன்சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில்தமையனுக்குச்சத்ராதி

பண்பாயுடன்பிறப்பிற்பகைபுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல்முறையிலுரைத்தனரே

அரசரிற்புகழ்பெற்றோர்

மனுவிட்சுவாகுடன்வாசான அம்பரீஷன்
கனனைதபெறுமாந்தாதாகார்த்திகாரச்சுனனபரதன்
விருத்தச்சிபியுடனேவிந்துச்சிவிந்துவுன்

மருத்துப்பகீரதனும்வாணனமுசுகுந்தனுடன்
தீராபுகழ்யயாதிதேவேந்திரனுடனே
பாசிற்றசரதனும்பாண்டவர்களைவர்களும்
சத்யவரிச்சந்த்ரனுடதாதைதிரிச்சங்கு
உற்றநளன்விதுரனேகோபுரூரவனும்
அந்நாளிலேபிரகலாதனுடன்மாபெலியு
மன்னுஞ்சடாயுகுகன்வாகாம்விபிஷ்ணனும்
ஆறைந்துபேருமதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்நிறுத்திப்பரமபதமுற்றவராம்
ஏற்கைபெருந்திரளிமெழில்விசுவாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்கவாசகருமாபெலியும்
வின்னமில்லாவள்ளுவரும்வேடனெனுங்கண்ணப்பன்
தன்னொலமூவர்களுந்தானவராய்ப்பேறுபெற்றார்

நல்லறிவு

தீயினாற்சுட்டபிண்தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்டவடுவொன்றுமாறாதே
எற்கையுடற்புகழோடெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறுஜென்மமெடுக்காமைநன்றாம்
மண்ணாற்பிறப்பதெல்லாமாறிலதுவேகாட்டுந்
தண்ணமுளவாய்ச்சொல்லாற்சாதியறிந்திடலாம்
சிறியோரிணக்கம்விட்டுத்தீங்கொன்றஞ்செய்யாத
பெரியோர்தயையடுத்தாற்பேதமொன்றும்வாராதே
துய்யகிரகம்நித்தியசோபனத்தினால்விளங்கும்
வையகத்துராசாக்கள்மனுநீதிபார்சொலிப்பார்
நாரியற்கள்சற்குணத்தினாலேவிளங்குவர்கள்
கூறும்விதரணனுங்கொடையால்விளங்குவனும்
பாரிலெந்நாளும்பகலவிளங்குமாவிரவிற்
காரிருளையும்விளக்குங்காந்தியுமாபதியாம்
பதிவிளங்கும்பொன்னாலேபா விளங்குமேகமதால்
சதுராய்ப்பகைவிளங்குந்தங்கள்புயவலியால
குடியேவிளங்குவதுகொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்குநெஞ்சினூற்றநல்லறிவால
புகழாற்கொடைவிளங்குமபோசனத்தாலுயிர்வழங்கும்
புகழரியநன்னூலாற்புத்திமிகவேவிளங்கும்
சொந்தமென்றுதுற்சனரைத்தோழமைகள்செய்யவொண்ணாச்
சந்தேகமுற்றதொருதையலரைச்சேரவொண்ணா

சார்ப்பில்லாக்கில்லைநிலைதயவிலாற்கறமுமில்லை
ஊரில்லாக்கரசுமிலலைஊணில்லார்குறுதியிலலை

மாட்டில்லாதார்க்கிந்தவையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக்கொள்ளல்விற்றலிலாபமில்லை

துற்சனற்குநேசமில்லைசுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்திநன்மைதனக்கெப்போதழிவுமில்லை

மனதின்குறிப்பைவதனத்தாலறிந்திடலாம்
அனைவோர்குணநடத்தையதனாலறிந்திடலாம்

சமர்முகத்திற்சூரன்வலுதன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வல்பிணியைத்தாதாலறிந்திடலாம்

கல்விப்பிரசங்கத்திற்காலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதிதோற்றமறிந்திடலாம்

மானிலத்தில்பூண்டுகளைமழைபாயறிந்திடலாம்
தானுநலார்பொல்லாரைச்சந்ததிபாற்கண்டிடலாம்

கண்ணிரண்டாம்யாவருக்குங்கற்றோர்குமூன்றுகண்ணும்
எண்ணுந்தியாகிகளுக்கேழுகண்ணாகுமல்லோ

மனங்குவிந்துஞானமகிமையறிந்தவர்க்கு
அன்நிதங்கண்ணாகுமென்றருளினற்முன்னோர்கள்

தர்மவான்றனனிடத்திற்றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடக்கனத்ததர்மநில்லாது

நெருப்புக்குமுன்குளிருநில்லாதுகான்மிகுந்த
கருத்தவிருள்மணியுங்கதிரோன்முனில்லாது

சத்தியத்தைநாளுமசத்தியமும்வெல்லாது
புத்திகெட்டகோபம்பொறுமைதனைவெல்லாது

புண்ணியத்தைப்பாவமொருபோதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கொருடமந்திரமுன்னில்லாது

சந்தனல்கஸ்தூரிதாம்பூலமாடைமுதல்
விந்தைசேறியாபரணமிவற்றையெவரீந்தாலும்

ஏற்போரொருகையாலேற்றாரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவர்க்குக்குறையாதவாயிசுண்டாம்

செகமுழுமையுந்தானேதேவாதீனமாகும்
மகவானதெய்வமதுமந்திராதீனமதாம்

மந்திரமாவதுவேவமாமறையோராதீனம்
சந்ததஞ்சோமாறையோர்சகலருக்குமதெய்வமென்பார்

பாலன்னமானாலும்பண்பில்லாக்கூழெனிலும்
வேல்சுத்தமாய்க்காலமிதமறிந்துண்ணனன்று

நல்லோர்குற்றதுயருநன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொருபோதுநிற்கமாட்டாதே

பாம்புகடுநெருப்பிற்பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகுமென்றார்மனுநூலோர்

ஊமைக்குத்தோன்றஉபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக்கதையெடுத்துச்சாற்றுவதும்

துட்டனுக்கெத்தனையோசொல்லிநன்மைசெய்வதுவும்
முட்டாளுக்குற்றநிசமுள்ளதைச்சொல்லுவதும்

இன்மக்கவிகடனையீயாமேற்பாடுவதும்
அன்பில்லாசோரஸ்திரீயாசையால்மெலிவதுவும்

நலத்தைக்கொடுப்பதில்லைநன்றாகாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்தமனபாண்டமாகுமல்லோ
ஐந்தானபாவத்திலாணுவிரண்டுநிலம்
ஐந்திலேமூன்றையவ்வைசொன்னாளாகாதம்
தெய்வத்தாலாகாதெனினுமுபர்ச்சியிலே
மெய்வருந்தக்கூலிதருமென்றனரேமுன்னூலோர்
இத்தனைநாள்நம்வீட்டிலேலேற்றும்விளக்கென்றணுகி
முத்தமிட்டார்கன்னமுடையெழும்பச்சுட்டுவிடும்
உற்றகுலத்தெய்வநமக்கொன்றுசெய்யாதென்றுபொய்யாச்
சத்தியமும்பண்ணினாற்றான்விடவுமாட்டாது
தூங்குவதுபோலுந்தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப்பாரிற்பிறப்பிறப்பு
கூட்டினுள்ளேயிருந்துகுருவிபறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலேசீவனிருந்தேதுசெயல்

கொல்லாமை

கொலையென்றுநெஞ்சிற்குறியாதான்வாணாள்மேல்
மலைவாயுயிருண்ணுமறலிவரமாட்டானே

நல்லோர்பெரியோர்ககுநாயகமேயாவரெனில்
கொல்லாமையென்பதனைக்குறித்தறிந்தவுத்தமராம்

தானுதிபதினுதன் தந்தைகாய்சற்குருவு
மானுர்மனையாட்டி மறையோர்புராணிகரை

சுத்தமுள்ளவிரர் துலங்குகவிவாணர்
உற்றதபோதனர்களுபர்குலத்தோர்பால்கர்கள்

சாலவிகடப்பிர சங்கிபிணியாளர்
ஞானமிசைவருமை யாளர்பதினெண்மரையும்

எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசிஷரையும்

சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோகரியபண்டிதரிவ் வேரெழுவர்தங்களையும்

தீதானவஞ்சகங்கள் செய்தாமிரயாமாகில்
தீதாய்க்கொடுநரகிற் சேர்வார்கள்திண்ணமிதே

அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும்

நன்றிமறந்தவரும் ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும்

மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
மேதாந்திமாதவத்தோர் மெய்நோகவைதவரும்

தெய்வமிகழ்ந்தவரும் இன்னமுதலாகப்
பொய்சொய்வோரன்னியர்தம்பொருட்காசைப்பட்டவரும்

பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
நேருண்டவிட்டுக் கிரண்டங்கள்செய்தவரும்

பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார்

சோதிடங்கள்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராயச்சித்தம்விதிப்போர்

நீதியுரையாம விரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்

பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமெண்பவனும்

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
குற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறபேராமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவரும்பினனரகம்

தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர்

அசுத்தமுடனேதா னாலயத்திற்செல்வார்கள்
நிசமாகச்சந்நதியி னோராய்க்குடியிருப்போர்

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர் உகூ

தீராப்பிணியடைந்து செகத்திலிந்தமூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள்

மேற்குலத்துகீழ்குலத்து மின்னருடன்புணர்ந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று

கண்காதுக்கெய்தாத கடுஞ்சொல்லைசொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள்

கெடுமதியாலொருத்தர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமேநாசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்

மன்னர்நிருப மதுதனையேதள்ளிவிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர்

எளியர்தனையடைந்தோர் இகல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளர்க்கோளர் பழிபுனையரெண்மரையும்

மண்டலத்தில்மூன்றுபிழை மட்டும்பொருத்தப்பாற்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னாநீதியதாம்

உரியவிவகாரம்வந்தா னுற்றூர்பகைஞரென்றும்
பரிதானையெய்துசம் பந்தரிவரேழையென்றும்

பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூராய்ச்சமன்செய்த கோல்போலிருதலையும்
நிறையாரிரைத்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையால்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம் உச

துஷ்டகக்கிரகம்

சாதிமுறைதவருஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமில்லாப்பாதகர்கள்
கோள்கள்மிகுத்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாசனத்துரோகிகளை

ஏழைதமையடித்தோ ரிகல்விளையுஞ்சண்டைகளைச்
சூழும்பிணிகளொடு அஷ்டமிருகந்தீய

கொண்டமைதீராத கோபம்பதினாறு
மன்றடக்குவதலலா லதிகரித்தால்வெலலரிதே

துற்சனரும்பொன்னுந் துரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுக்கருவி

மானமில்லாமூளிக்கு மாறாவர்களையும்
ஈனமிலாக்கரும்பு எள்ளுடனேயீரைந்தும்

தெண்டித்தார்க்கெல்லா செயங்கொடுக்குமின்றிவற்றை
பண்டுவேட நூலிற் பகர்ந்தாரே முன்னோர்கள்

தந்தைதாயானாலுந் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும்

மந்திரியேயானாலு மரபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால்

அன்றேயகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே ௨௫௫

தோழமையில்வஞ்சகரை சொற்கேளா மைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை

தன்னகர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
மன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணம்லோபிதெய்வம்

தரித்திரனுக்கு தனங்கொடுப்பார்தெய்வமிந்தத்
தாரணியிலதுஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார்

நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம்
ஆதிபராபரமே யனைவோர்க்குந்தெய்வமதாம்

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னொன்றுமுன்னொன்று பேசித்திரியவொண்ணா

வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரண்டும்பேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையில்லாச் சண்டையினிற்போகவொண்ணா

வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரவேணும்

நீடுநிதிகண்மிக நீக்கியறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுகத்திற்செல்லவொண்ணா

ஞானமறிந்தாலு நாடொப்பனைகளது
வானதுபோலேநடந்து மகிமைபெறவேவேணு

செம்பொற்குபேரனெனிலுஞ் சீவனத்திலேமுய
பண்புடனேநாளும் பண்ணிதிருக்கவொண்ணா

வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவும்வேணுமல்லோ

உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பினைசென்றிருக்கநன்று

பெற்றபிள்ளைநான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம்

மெலிவாகியேயதிஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே

தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
விராயவிழ்தத்தை விட்டுவிடலாகாதே

தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம்

எதோர்மருங்கு மில்லாரிடத்தினிலே
பேதைகளாச்சேவித்து பொறும்பொறுங்கள்வாங்குவதில்

மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம்

வீணிற்பலவித்தை மெத்தவிரும்புதலி
லாணியாம்வித்தைதக ளறக்கற்றலொன்றுநலம் ௨௭

சின்னமியல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதி
லுன்னும்புலிக்குட்டி யொன்றைவென்றாற்கீர்த்தியுண்டாம்

அவிவேகியுடன்வெகுவா யானவுறவதிலும்
விவேகிக்கையிருந்தால் மெத்தவ துநன்றாகும்

தன்னுயிற்குவந்தலயத் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிவிடவேண்டுதற்கும்

மையல்கொண்டமாதருக்கும் வையகத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தாற்பாவமொரு போதுமில்லையென்றனரே

பின்னால்வெகுபொருளைப் பெறுயளிப்பதிலும்
முன்னால்தருணத்தி லீய்ந்தவரைக்காசுநன்றாம்

காலையென்றும்பின்னையென்றும்நாட்கெடுவுசொல்லுவதில்
வேலையிதுவல்லபோ வென்றால்மிகவுநன்று

தெளிவானகல்விகற்றால் தேமம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம் உஅ௰

சித்தமதிற்பத்தியே தெய்வவசியதாம்
இற்றப்பெருஞ்செல்வ முறவோர்தலைவசியம்

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுகெட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம்

சாந்தமொழுக்கஞ் சகலஜனவசியம்
வார்ந்தகமுநல்ல மனையாளுக்கேவசியம்

கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்க்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குச்சொன்னாலும்
மானமுளநல்லோர்க்குவணங்கிநடந்தாலும்

செய்தபிழைபொருத்துத் தேசமதில்வாழ்பவற்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுகற்புதமாம்

செய்தபிழைபொருத்துத் தேசமதில்வாழ்பவற்கு
துய்யவயித்தியங்கள் சோதிடர்கள்தங்களிடம்

மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கநன்றாம்
வெறுங்கையாற்போனால் விழலாங்கருமமெல்லாம்

பாரிலொருதாயர் பலபிள்ளைபெற்ருலும்
சீருமழகுந் திறங்குணமும்வெவ்வேறும்
பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
துயிரியமுள்ளவற்குத் தாஞேர்பயமுமில்லை ௨௯
உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பாவமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை
தனவனுயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனென்றெண்ணி யன்றேயகற்றல்நலம்
அன்னியனுயிருந் தன்புள்ளோனுனக்கால்
தன்னவனுமென்றவனைத் தாபரித்துக்கொள்ளநலம்
நல்லோர்க்குமுன்னுளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொருப்பார்கள்
அற்பாத்தெழுநூ றதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுக்காராம்

செய்ததவத்தளவே செய்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம்

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்

சாதிவரம்பெண்ணு தனுசரிக்கவேண்டுமதே
நீதிமுறையென்றுமனு நீதிநூலோடுமாம்

இன்பக்கவிழுட ரிடத்திற்படித்தாக்கால்
நண்பில்லைசற்று மகற்றும்பழுதுசொல்வார்

கற்றோருமைதனைக் கற்றோரறிவலல்லாற்
சுத்தமலடியிர சூதிதுயரறிவாளோ ௩௰

பஞ்சரித்துவேண பரிசுபெறுவதிலு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணனன்றாகும்

விம்பானசத்ராதி மெய்யென்றிருப்பதிலும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்

கண்ணென் றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணெப்பதேனை யெழுத்தென்பதுவேகண்

கைப்பொருளேபொய்ப்பொருளாங்காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காப்பொருளாம்

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே

யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
தீனனைதயிருந்து தின்றாலுங்கேடெய்தும்

மனுநீதிகாதல்.

ராசருரியரென்று கடத்தைபொருமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே

இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லநஷ்டபயம் ராட்டினம்போற்சுற்றிவரும்

தேசமதிலேழைபர தேசிமறைவேதியரை
ராசர்காவாவிடா னன்றல்லபாவமுமாம்

சாகாவரம்பெற் றவர்க்குப்பயமுமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை

வித்தைகற்றால்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரையில்லலர்பூவாகும்

திருந்துமயிர்நகருந் தேசமன்னர்பல்நான்கும
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை

மின்னாரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
தன்னைசேர்பண்டிதர்கள் சாதியொத்துவாழார்கள்

ஓங்குபொருட்சேத முயிர்ச்சேதம்வந்தணுகில்
சாங்கமுடனசிரித்தாற் றயிரியம்வந்தெய்திடுமாம்

தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருடனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லானுமோர்துரும்பு

வீரமிகுசூரனுக்கு மேவலர்சேனைதுரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு

பெரியோருக்கற்பாசைப் பிரயோசனத்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்கவிதுரும்பு

நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன் பாவாணனென்பவனும்

பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன்

சினமென்பதென்பதொரு சிக்காமதையறுத்தால்
மனமெனபதென்பதற்ற வாறேமுடித்திடலாம்

அரிதானமாதங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவிழலாக

எத்தர்மமானாலு மெண்ணித் துணிதனன்று
மிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணிலிழுக்காம்

பட்சிக்கரசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குவேர்பலமாம்

வாகனங்கள்தானுடையான வழிநடைக்கஞ்சானும்
வாகுடனேபானுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்காரனொன் றுக்குமஞ்சானே

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறாய் வசையணுவுங்கேளானும்

மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து

கூடுகூட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாறதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே

மச்சுவிடால்கிழல் மானார்தனக்கோடு
நிச்சவமாய்க்கணற்று நீசாமிவைநான்கும்

கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
திட்டமுடனுஷணத்திற் சீதளமுமாகுமல்லோ

சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால் மறிந்துசெபஞ்செய்பவர்களு

ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனு நூலி னிகழ்த்தினார்முன்னோர்கள்

பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும்

பெரியோரைச்சார்ந்தவற்கு பெருமைமிகவுண்டாகும்
சிறிதானதுற்சனரை சேர்ந்தவர்க்குகேடுவரும்

விண்ணதனிலேயிருந்து வீழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிரும்பில் வந்துவிழுமுன்சுவறும்

தாமரையில்வீழ்ந்தாற் றுழாதுயாராது
சேமத்திரைகடலின் சிப்பிலேவீழ்ந்தாக்கால்

விலைமதிக்கவொண்ணாத வென்ரளத்தையீனும்
த்லமீதிலிவ்வாறு சற்பாத்திரமறித்து

கொடுப்பதேதர்மமிந்தக்கூறிந்துசெய்பாட்டால்
விடுப்பாய்கொடுப்பதெல்லாம்வீணாகுமென்றனரே
காரிருளிற்புற்றடியிற்கண்டபழுதைதனைச்
சீறுமுயர்பாம்பென்றுசெப்புவார்தப்பாமல் ௯௪௰

உத்தமர்கள்தாசிவீட்டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச்சமுசயமாய்ச்சொல்லார்கள்

வீணாகப்போகாவிடந்தனிலேபோகவொண்ணா
தோணுமற்போனக்காற்றுன்பம்வரும்பின்னிழுக்காம்

தேசிவந்தாற்பசுவைத்தேடாரதிமோகத்
தாசிவந்தாற்றனதுதாரமதைத்தேடார்கள்

ஆசையாலெப்பொருளும்அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோசமில்லைகேடுகெட்டலுத்தரிலும்லுத்தர்களாம்

அன்னைபிதாமுத்தோனாசானரசருடன்
பின்னைப்பெரியோர்கள்பிராணசினேகிதர்கள்

ஆகவெழுவர்களுமழையாதிருந்தாலும்
போகலாமேவலியப்பிழையொன்றுமீனமில்லை

மலைகானஞ்செல்லநன்றல்லாறுதாண்றரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக்கௌபீனங்கட்டநன்று

ஓடெடுத்துவாங்கியேயுண்ணநன்றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய்நாடுவதுநன்றாகும்

ஈயாதலோபியிடமேறும்புலவருக்கு
ஞாயமிதுவெனறுநவின்றாரேமுன்னூலோர்

வெள்ளாட்டியானவளைவிரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்போயொழுக்கமெல்லாங்கெட்டுவிடும் ௯௫௰
வேசையரைச்சேர்ந்தாக்கால்வெட்கமில்லைபொன்சேதம்
ஆசையாலேவிதவையானவளைச்சேர்ந்தாக்கால்

ஆயிசுமேதான்குறையுமகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச்சோரத்திற்சேர்ந்தாக்கால்

வன்னரகஞ்சேர்வரிவையாகாதுநாளுமென்று
முன்னோர்வடநூலில்முறையாயுரைத்தனரே

செல்லுமிடமானாலுஞ்செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொருபோதும்வைக்கலாகாதே

இன்னவகையினாலெய்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யாதாராகினஷ்டம்வரும்

கள்ளுண்டாலுற்றகாரணமெல்லாம்வெளியாம்
கொள்ளையரும்பிற்கொலைகள்வந்துநேரிடுமே

சூதாடிலிம்மையிலேதுன்பமவருமல்லாது
மேசதாரமாகுந்திரவியங்களுள்ளதெல்லாம்

ஆகாயவீதிக்குஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோர்மாசபைக்குரத்தினமாம்

சயனந்தனக்குரத்னஞ்சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீடதற்குரத்தினஞ்சற்புத்திரராம்

எமனைவென்றுசயமேற்பவரேயானாலும்
மேன்மைசெறிபெரியோர்வெம்பகையொன்றாகாது ௩௯௰

ஆர்க்குந்திருமாதனுக்கிரகமுள்ளளவும்
பாருக்குள்ளெந்தப்பகையுநெருங்காது

கூடாதகாலங்குறுகிவருங்காலம்
வீடானதிலிருந்துவினைவிளையுந்தன்னாலே

தாரித்திரர்கள்பசிதாங்குவதேமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க்கீவதுவேவட்டியுமாம்

எளியோருடனெதிர்த்தேயெண்ணாமல்வைவதிலும்
விழிகாணாதோடென்றுவிரட்டுவதேநன்றாகும்

அன்பில்லாதாரிடத்திலதிகவுறவதிலும்
பின்புமவருடையபெருத்தபகைநலமாம்

வேண்டாப்பெண்டுரைவீணாய்வைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்றுவிரட்டிவிடலுத்தமமாம்

சாலவேவாழ்வுடையோர்சாவதற்கஞ்சுவராம்
சாலவறுமையுற்றோர்சாவதற்கஞ்சாறும்

பாரிலேயீகையுள்ளோன்பாக்கியமெவ்வாறென்னில்
பூர்வபட்சப்பிறைபோல்வளர்ந்திடுமாம்

ஈயாதான்செல்வமதுஎத்தனையுண்டாயிடினுஞ்
சாயுமமரபக்ஷசந்திரன்போற்றேய்ந்திடுமாம்

ஈனவறுமையுறினுமேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவானாகுமென்றுசொல்லிடலாம் ௩௭௰

பூரித்தசெல்வர்கள்தான்பலர்க்குதவியில்லாவிட்டால்
தாரித்திரரென்றுதப்பாமற்சொல்லிடலாம்

கையானதுநமதுகண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்றகாரணமுண்டோவதுபோல்

இளையோர்நமையடைந்தோரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேணுமவதேபெரியோர்முறைமையதாம்

அழகிளமைமூப்புமயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடையமரணவரைநில்லாது

நன்னயஞ்சேர்பாலுடனேநல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்புவைத்தாலாவின்பால்மட்டுமுண்ணும்

தண்ணீரைத்தள்ளுந்தகைமைபோலேயுலகம்
விண்ணுனமாயுரைத்தாலிந்நூலைப்பாராமல்

எண்ணியேநுண்ணியநூலென்பதனைக்கற்றக்கால்
மண்ணிறசுகமும்வரும்மறுமையிலேசொற்கமுறும்

இட்டமுறுமோகஸ்திரீயேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ்சினம்வரவேமாட்டாது

இன்பம்பொருளும்மிகவெய்துவதானுலுமதிற்
றுன்பம்வருமென்றறிந்தாற்சொர்ப்பனத்திநேக்கவொண்ணு

பயனில்லாவார்த்தைசொல்லிப்பலநாளுங்கோளுரைத்தால்
தயவாயவர்செய்யுந்தர்மம்பலியாது

ஊரார்பகைதுன்பமோயாமகாவறுமை
மாறுதெனவுமுன்னுள்வள்ளுவனுர்சொன்னுரே

வாழ்வுள்ளோரானுலுமகாஞானியானுலும்
தாழ்வுள்ளோரானுலுங்கயிரியவானுலும்

நாடொப்பனநெகிழலாகாதொருநாளு
மூடத்தனமாகமுனபின்னுய்ச்செய்பவரும்

அருபியுமான்அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செய்தபிணத்தோடேசேர்க்கவென்றுர்

பொருளில்லாதார்க்கிந்தப்பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்குஅவ்வுலகத்தேதுமில்லை

ஊன்தின்பவர்க்குவொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலுஞ்சாம்பரிலேவிட்டநெய்யாம்

வாக்கிலொன்றுபேசிமனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாரென்றுகள்ளவாசாரஞ்செய்வதும்

காமக்குரோதமுற்றுக்கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்துவெண்ணீற்றைப்பூசிடுவார்

தாடிவளர்த்துதலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப்பாதுகையின்மேல்திரிவார்

மகத்திவருமல்லவல்லவாய்ப்பிழைப்புக்காத்திரியும்
செகச்சாலக்காரரிவர்சித்தியொன்றுமில்லையென்பார்

ஆவென்றபாவமொன்றுமற்றார்பிறவியறும்
சீவன்முத்தனாகுமென்றுசெப்பினார்முந்நூலோர்

பிறவுயிரைக்காத்தல்பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமைவெகுளாமையிந்நான்கும்

தவமிதுவாமென்றுந்தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவரென்றுஞ்செப்பினார்வள்ளுவரும்

மன்னவரேயானாலும்மற்றெவர்களானாலு
மென்னவிதமாமோரிடர்வருமென்றேயறிந்தால்
கைத்தானயமதனைக்காறுமற்போனாக்கால்
மகத்தானவாழ்வுகெடும்மாநிலத்திற்றுன்பமுண்டாம்

மாறிணிலையும்வல்பிணியுந்தீககோளும்
வேறுபகைவர்களவாமேலுமெவற்பகையும்

வாராதுதற்காலவகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்துஅவரைத்துணைக்கொள்வதாம்

ஈகையில்லாமாந்தரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருகமதனிலேசேர்க்கவென்றார்

தலமீதில்மிக்கானசாத்திரங்கள்கற்றாலு
மூலகவியற்கைதனையொன்றும்விடலாகாது

இல்லாதாரானாலுமிரந்துமூலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரேமாதவருக்கொப்பாகும்

வலியாரெளியாருமானவான்மூவரிட
மலிவானகோபங்கள்வைத்தாரேயாமாகில்

நாடாளம்லட்சுமியும்ராசர்பகைநேருங்
கேடாய்முடியுமென்றுகிளர்த்தினளவ்வையுந்தான்

எப்போதுங்கீர்த்திசற்றுமில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினாற்பூமிவிளைவுகுன்றிப்போய்விடுமாம்
குற்றமில்லாமற்கொடுத்துபுகழ்தேடாரை
செத்தபிணத்தோடேசேர்க்கவென்றார்வள்ளுவரும்

காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற்றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்சற்குருவைநிகழ்த்துங்கொடுங்காலம்

பெரியோரைத்தூஷணித்துப்பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையாயகம்பேசுமிக்காலம்

மெய்யேபொய்யாங்காலமேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப்பொருந்துமிதுகாலம்

வன்சமரிலோடினவர்வரிசைபெறுங்காலம்
அஞ்சியேயாளடங்கியரிவையர்மேலாங்காலம்

இன்பமுறுநூல்படித்தாலிகழ்ச்சிபுகல்காலம்
பண்பில்லாநையாண்டிப்பாட்டைமெய்க்குந்துற்காலய்

இனிதானசர்க்குணர்க்கொன்றியாக்கலிகாலம்
அணியாயக்காரருக்குமடிக்குதவுந்தற்காலம் சாயு

பெண்டாட்டிவைதாலும்புருஷன்குறிவாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங்குலாமருக்கேயாங்காலம்

ஆனகலிகாலத்தடைவிதுவேயானாலு
மானபரனனவனும்வையகத்திலுண்டெனலாம்

இருப்பார்க்கொருகடனுமெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க்குதவுவாரிக்காலம்

ஆசாரந்தர்மங்களங்கசுத்திமூன்றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளைமேல்வட்டமாங்காலம்

தேடியிடுவாகளுக்குத்தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப்பெண்டுகள்வாய்க்குங்காலம்

சுகமாய்க்குடிப்பிறந்தசுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர்மேலவராமிக்காலம்

கொண்டபெண்ணைவிட்டுக்கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையுமூடர்மேலாங்காலம்

சொந்தமணவாளனையுந்தூஷணித்துச்சோரத்தில்
அந்தபகலூர்சுற்றுமவிசாரிக்காங்காலம்

மேற்குலமுங்கீழ்குலமும்விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள்வறுமைக்குள்ளாங்காலம்
பிள்ளைவயதில்மிகுத்தாற்பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால்சீஷன்குருவைத்தேடான்

பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுத்தாக்கால்
கொண்டகணவனையுங்குறியாகவெண்ணாளாம்

பாரோர்கணோய்தீர்ந்தாற்பண்டிதரைத்தேடார்கள்
சீரானசெல்வம்வந்தாற்றெய்வமதைப்பேணார்கள்

தன்னுடையமாதாதமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவிமாமியாரானவரும்

தெய்வநிகரானதேசிகனார்தேவி
யைவரையுந்தாயென்றருளினார்முந்நூலோர்

பெற்றபெண்போலவுமேபேணிமருமகளை
வைத்தாதரித்துவருமாமியேதாயாம்

தந்தைதனக்கிளையதாரமந்தகைகேசி
பிந்தவருஞ்சித்ராங்கிபிள்ளைகட்குச்சத்ராதி

பின்தாரப்பிள்ளையென்றுபேதகமில்லாமனக்
குந்திதனக்கொப்பானகோதைமுதல்மாதாவாம்

பிதா.

தன்னையேபெற்றவருஞ்சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமையனுடன்மாமனவளர்த்தவரும்
விதனைதவருவித்தோர்வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்
ஓரொன்பதுபேருமுற்றபிதாவென்று
கூறுமனுநீதிக்கொள்கையிதுவேயாகும்
கல்விவருவித்துக்கடனென்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்ததிறவானோர்தந்தையுமாம்

மைந்தர்

அற்பராம்நூறுபிள்ளையானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனொன்றானாற்றலைமுறையெல்லாம்விளங்கும்
தந்தைதாய்வாக்யந்தமயன்குருவாக்யம்
சிந்தைதனிற்சத்தியமுந்தெய்வவிசுவாசமுடன்
இத்தகைமையாறுடையோனினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பானபுத்திரனேபுத்திரனாம்

எத்தனைதான்செல்வத்தியல்பொடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வுமபோசனமுநஞ்சாகும்

தந்தைதாய்வாக்யமதுதன்னைப்பரிபாலித்தோர்
நந்தாதசரதனும்ராஜகுமாரனென்பார்

பிதாவுடையவாக்கியம்பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரரில்மிக்கசுதன்பரசுராமனென்பார்

ஆசான்றன்வாக்யமனுவுந்தவறுதான்
வாசாலன்சத்யமுள்ளவாய்மையரிச்சந்திரனும்

தமயனுரைதட்டாதசற்புத்திரராஞேர்
தமையுமங்கேசீர்தூக்கிற்றருமனுக்குநேரிலையோர்

தந்தைபேர்தன்பேருந்தாரணியிலேவிளங்கத்
தந்தைதாய்சொல்மறுக்காத்தன்மையோன்புத்திரனும்

தந்தைக்கிசைந்தமறுதாரமேதன்றாய்போல்
வந்தனைசெய்மைந்தர்மனுகுலத்துமைந்தரொப்பார்

நல்லார்பொல்லாரென்றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்றசுதாராலறிந்திடலாம்

சோசியம்.

உற்பவித்தநாளும்பின்ஒன்பதுடனென்பதுவும்
வைப்பேதும்வைக்கவொண்ணுவழிபோகலாகாது

வல்பிணியுந்தீருதுமருந்துண்ணலாகாது
கல்யாணமெண்ணெமயிர்களைந்திடவுமாகாது

இல்லம்புகுதலினிதுண்ணலும்விதைக்க
நல்லறங்கள்செய்திடவுநற்பணிகள்நற்றாசு

தானுந்தரிக்கவிதுசார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணிதவிதியாலுரைத்தனரே

திங்கள்முதநாளுமதுசென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள்வரசியமாவாசியிலும்

சென்மநாள்மூன்றிலுஞ்சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந்தன்குறையுநோயணுகும்

தலைக்கெண்ணெபோசனமுஞ்சவரமுடனித்திரையும்
நலத்தைக்கொடுக்குமந்தநற்கிழக்குதெற்கதும்

மற்றவிருதிசையுமாகாதுமத்திபமாம்
அந்தமழிவதல்லாலாயுள்விர்த்தியில்லையென்றார்

இலட்சுமியிருப்பிடம்.

மாயவன்றன்மார்பினிலுமன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந்துளவங்கடப்பமலர்
தாமரையின்பூவினிலுஞ்சர்கரத்திற்கங்கையிலும்
சேமமுறுமியானைமேதகிமுகத்தினிலும்
ஊதுகின்றசங்கமுடனுத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலேகெட்டபோதுன்னார்பால்
சுத்தமுள்ளவீரரிடஞ்சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர்தர்மசரிபாலனர்கள்
அழகுஞ்சுசிகரமுமமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள்வாழுமிடந்தனிலும்
மாகனம்போல்சுத்தமானவிடந்தனிலும்
கோகனகமாதுகுடியிருப்பாளெந்நாளும்

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற்சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற்பல்விளக்கப்பேரிடத்தில்

சூளைப்புகையிற்சுடுகாடெரிபுகையில்
காளையாங்காமுகர்பால்கழுதையிடத்தினிலும்

கள்ளிநிழலதிலுங்கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற்கொட்டைநூற்பாரிடத்தில்

நீசர்நிழலில்நிட்டையில்லாதிடத்திற்
பேசுங்கடுஞ்சினத்தோர்பேடியிடந்தனிலும் சகூய்

சுத்தமில்லாமனையிற்சுராபானரிடமிரவில்
வெற்றிபெறும்வேல்விரைவினிழல்தனிலும்

என்றுஞ்சுசிகரங்களில்லார்விதவைகளை
தொன்றியணைவோர்பாலுதயந்துயில்வோர்பால்

மீதுண்ணருந்துவர்பால்மேன்மைசற்றுமில்லாத
மூதேவியாளுநிதமோடிக்குடியிருப்பாள்

பாங்காகநாளும்பகற்புணர்ச்சிசெப்பவருந்
தாங்காதிடக்கையாற்றும்பூலந்தின்பவருந்

போசனங்கள்செய்கின்றபோதிற்சிரசினிலே
தூசுபுனைந்துண்டதுன்மார்க்கரானவரும்

காலையிலுமாலையிலுங்கண்டுயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பால்லட்சியுமில்லாளே

பகை

பாரம்பெரியகத்திபஞ்சதனக்கோனாலும்
சூரியனுசந்திரனுந் துஷ்டராவினால்மறையும்

சிற்றெறும்பால்யானைதிகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க்கவதிகளும்வந்தெய்தும்

தந்தைதாய்சொற்கேளார்தடுப்பார்கோபிப்போரை
அந்தக்கொடியோருமட்டமத்திலேசனியாம்

சபையிற்பிரசங்கந்தன்னிற்பழுதுரைப்போர்.
அபயமிட்டுபேச்சில்மிச்சமானதொருபெண்டிரும்

தாயாய்விரோதியுடன்றுனிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்தசெவ்வாய்க்கிணையெனலாம்

தன்னைமிஞ்சுமடிமைசந்திராஷடப்பங்குக்காய
தன்னைச்சபையேற்றுந்தம்பிசென்மச்சூரியனும்

சகோதரர்க்குவஞ்சனைசெய்தமயனுமென்பவன்றான்
மகாபாவிமூன்றுமிடத்துவியாழமதாய்

பார்த்திபர்கள்மெத்தவென்றுபழுதுசொல்லக்கெடுப்போன்
ஏற்றமிடும்பொல்லாதஇராகுவுடன்கேதுவுமாம்

சாலககடன்பட்டதந்தையருமார்க்குமனு
கூலமாயுட்பட்டுக்கொண்டுதிரிதாயாரும்

வித்தையில்லாப்பிள்ளையுடன்வசையாய்பெண்டாட்டி
சத்துருவர்நால்வரென்றுசாற்றினார்முன்னோர்

வேங்கைபதுங்குவதுவேஷம்பின்வாங்குவதும்
பாங்காய்ப்பகையுறவும்பாம்புசாய்ந்தாடுவதும்

நல்லோர்பெரியோர்கணயந்துவணங்குவதும்
மெல்லவிடச்சிரிப்பும்விழிமகிழுமின்மொழியும்

மிக்கானவில்வளையும்வேழமுறங்குதலும்
உக்கிரதளஞ்சமரிலொன்னலார்கொக்குவதும்

இத்தனையாமீறைந்துமெளிதாயகினைக்கவொண்ணு
மத்திபமுமாமுயிர்க்குவாதைகளுமுண்டாகும்

சொற்குற்றமபாராட்டித்தொழுவழக்கைச்செப்பவர்போல்
பற்காட்டிச்சீவனங்கள்பண்ணித்திரிவதுதான்

வலிதானவாடரவின்வஞ்சப்படத்தினொன்னோ
எலிவாழ்ந்ததொறியமபிறாடு[illegible]

பண்பாய்க்கடுவுறவுபண்ணவந்தானுக்கு
பின்பவரையும்பிரிந்தார்பிணக்காம்பகைநேரும்

அங்கபங்கமானாலுமகுசியங்களானாலும்
தங்கள்குலத்தேகுதாழ்வுற்றிருந்தாலும்

நிந்தனைகளசொல்லிநெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமுமிழுவில்லாதில்லையில்லை

துன்பம்பழுபகையுந்துடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்யதாம்பெருமைசற்றுமில்லாது

பகைவெறுப்பு

நேர்ந்தவினைவலியுநோவார்கடன்வலியும்
சேர்ந்துணைவலியுஞ்சீர்தூக்கிச்செய்வதுமாம்

கூடாதகாலமடைக்கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தகாலமடைக்கொகுபோல்வெற்றிகொள்வாம்

நட்பவெறும்பெலாங்கூடிநோக்காமலேயேற
ஒப்பில்கருங்குழிந்தவுவமைபலவெல்லுதலாம்

மெள்ளமெள்ளப்பாய்ந்தநீர்முகக்குமேலையின்
கல்லைக்கரைக்குங்கதைபோற்பகையழுத்தல் ௨௯

காலமறிந்துகாக்கைவெல்லுங்கூகைதனைச்
காலமதுதப்பினர்காக்கைதனைக்கூகைவெல்லும்

சிலநாளாயானையொருதேங்காயினேடைக்கிப்
பலிதமுளாளேவல்லகளைப்பாகனையேவென்றதுவாம

பண்பர்க்காலமதுபார்த்துபகைசெலுத்தும்
பண்பிருவரமென்றுபகர்ந்தாரேமுன்னோர்கள்

உற்றபகைவரென்றுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுபகைபேதமதைக்காட்டுவதாம

காலத்தின்சீலன்கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்துகுரங்குவார்தப்பாது

சேரிடம்

சந்தனவிருட்சமதைச்சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகமேயானைந்தவக்காககமன்னிறமாம்

பாலில்கலந்தநீர்படிமணிக்குள்வடமும்
லால்மரகதக்கற்சாய்கைபட்டதிமுன்றும்

தன்னிறமக்கொக்கொடுக்குந்தன்மைபோல்நல்லோரை
நணையாய்ச்சார்ந்தாகுற்றுணையேயுண்டாகும்

நல்லோர்காண்பதுவுநல்லார்சொற்கேட்பதுவும்
நல்லார்குணமுரைத்தானன்மைகண்டாநற்றுளம

ஆசாரமன்புமறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டுசேர்ந்தாற்பெருமைவரும்

கதிரோனுதிக்கையிலேகண்டவெஞ்சாயகை
மதியமதிலேகுறுவாறுசிறியோரிணக்கம்

மதியநதிரும்பினபினவர்நிற்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச்சார்ந்தாரேநன்மைவரும்

கற்றபெரியோருறவுகரும்பைநுனியிலிருந்
குற்றதல்வேர்வரைக்குமுண்டருசிபோலாகும்

சிறியோருடனுறவுதின்கரும்படியிலிருந்
துதியநுனிவரைக்குமுண்டருசிபோலாகும்

செல்லாவிடம்

கடலோடுங்கப்பலதுகரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர்புனலிலேயோடாது

தண்ணீரில்முதலையதைத்தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றிநாடுற்றாற்கட்டையும்

செல்லுமிடமிவ்வாறுதிறஞ்செலுத்தவேண்டுமென்றிங்
செல்லாவிடந்தனிலேதிறஞ்செலுத்தக்கூடாதே

யோகம்

மன்னர்மெச்சிக்கும்வரிசையதிகாரம்
மன்னுஞ்சாம்பிராச்சியமும்பட்டாபிஷேகமென்பா
நல்லகுணமாளுமுன்னைநாடிவலியவந்து
புலஸிடிலேயோகம்புத்தமிர்த்தசித்தமுமாம்
மண்ணிற்புதைத்தபொருள்வாதமுறைக்காசையுற்று
நண்ணுவார்க்கெய்தாமண்ணோர்கட்செய்துவதும்
குஞ்சுப்பயிர்விதைக்கவிளாவுநன்றுப்போவதுவுங்
கொஞ்சம்பயிரிடுவோர்கூடிவந்துவாழ்வதுவுங்
கப்பல்விபாரங்கணக்குறைத்துபோவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய்தோர்களுக்கூடுவதும்
காணுமற்காணுமற்காவலர்கள்தேள்வியினல்
தேனுதலாய்வலியத்தொழில்கொடுத்துவாழ்வதுவும்
மேனாளிற்றந்தைதாய்விட்டகுறையாகுமென்று
தானுமுன்னுள்செய்திருந்ததர்மமாவதென்னும்

அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்தநாட்பெரியோருக்கீய்ந்துவரம்பெற்றதென்றும்
லட்சுமிகடாட்சமிந்தநாள குவலையோர்க்குமென்று
உச்சிதமாய்முனோருரைதாருலகோர்க்கு
திருமடந்தைசேநிலசிறப்புங்கணமுமுண்டு
பொருளுந்துருமபாகும்பொல்லாருநல்லோராம்
செல்லாதவார்த்தைசெல்லுஞ்செய்யுமரியாதையுண்டாம்
எல்லாருமேபுகலவாரெதிசாளியுமுறவாம்
கீழோருமேலோராய்க்கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழப்பெருங்காற்றுநதண்ணீர்போற்கூடிவரும்

மணஊக்கம்

வீரப்புலியுயிரைவிட்டாலேதோலைகொடுக்கும்
சூரனுயிர்போமளவுந்தோர்வையென்றுபினவாங்கான்
உத்தமியேயென்னாளுமுயர்குலையில்லாமல்
சற்றுகிலுமபிறர்க்குதன்னியத்தைத்தானகொடுக்கான்
ஏற்கையேபோய்ச்சாலவுநாளென்னதுன்பமற்றாலும்
ஊக்கமதுகைவிட்டாலுயிர்க்குலையம்வந்ததெய்தும்
உள்ளஞ்சிதராமலொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ்சித்திமுதலிரண்டுமெய்தும்
பல்லாமிவினைக்கவொருபலனதுவுமெய்யாது
அலைவாய்ததுரும்பதுபோலலைந்துகெஞ்சிததியில்லை
ஐம்புலனையுமசிறியோரடக்குவதுவேயருமை
செம்பொனனெல்லாநதேடித்தினங்கொடுப்பதேயருமை
தெண்டிக்கவல்லன்சினம்பொருப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்தகொம்பனையேயருமை
தேசமொன்றில்வேதமளநிற்பதுமேயருமை
தேசத்திவ்வைவரையுந்தெய்வப்பிறப்பனெலாம்

அளவிளாமை

பெருங்கடலாழயுருஷயோகஞ்சூது
மங்கையர்கடவமுமவஸ்துவின்றனிரிணமும்
வானளவுமாற்றுபணலுமழைத்துளியும்
வாணிசுறுக்கமுயணூண்டராசையையும்
உற்றபெரியோர்களுள்ளககருத்தளவுங்
கற்றோர்கருத்துங்காயமகண்மையாலும

மாணிடர்கள்சென்மமனுத்தொகையுமாமனையு
மானபருவதங்களளைத்துமதிநிரையும்

பார்கருள்ளேயிந்தப்பதினறுடில்லபத்தை
யார்க்குமளவிடவுமாகாதுகவணரே

இறந்தார்பிறந்தார்களிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளைத்தொகையறிந்துசொல்லவொண்ணு

ஆயுள்நிதானங்களாறிரண்டிலேகிரகந்
தூயநிதரெனநிலைசொல்லாயெவராலுமில்லை

சூரிற்ன்முன்னிற்காலாஞ்சுடுமெணலிநிற்கவொண்ணு
ஆறணியுமீசர்முன்னேயஞ்சாமற்பேசிடிலும்

தேசமதில்முகையச்சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்னுபெரியோருரைந்திடுவார்

வாரியினீராழமவானளவுமாமலையும்
ஆறின்றகரைமணலுமகாசத்தேயுடுவும்

அன்பாமிவைவையைந்துவளவுகண்டுசொன்னலுக்
கொம்பனையார்நெஞ்சக்குறிப்பறிய்வொண்ணாதே

வெள்ளம்பறவைகளும்விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்குமொருவழியாயநில்லாதே

உதவி

வாவியிநீரம்பலத்தில்வைத்துமரநிழலுந்
தாவுமணலூற்றுந்தண்ணீரின்பந்தலுடன்

பாங்கானசந்தியிலேபழுத்தமரமானதுவுந்
தாங்கும்விபசாரிதனமுங்கீலவினெளி

பார்க்குளவிலேவேசியர்கள்பாங்கியமிவ்வொன்பதுவும்
ஆர்க்குமுபகாரமல்லாதுவிணலவே

நல்லோர்தேடும்பொருள்கள்நாவலர்க்கும்வேதியர்க்கும்
வல்லகுருவானவர்க்கும்மாதாபிதாவினற்கும்

புத்திரர்கடன்கிளைக்கும்போற்றுதகதெவதைக்கும்
உற்றசகோதரற்குமுண்டென்றுரிம்பினர்க்கும்

தர்மமேசெய்பவர்க்குஞ்சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்போக்குமெய்துமிவாபொருளே

இல்லந்தனக்குத்தன்னேந்திழையாளேதுணையாம்
நல்லதேகந்தனக்குநற்றுணைவரேதுணையாம்

தேசாந்திரனுக்குச்சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்திலவருக்குத்துணைதான்செய்ததர்மம்
வர்த்தகர்பால்வைத்தபொருள்மன்னவர்கடன்பழக்க
உற்றவிவேகிக்குபகாரஞ்செய்ததுவும்
பருவத்திற்பெற்றபிள்ளைபக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீரைந்துந்தானுதவுந்தப்பாதே
என்னபகையானாலுமிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொலினுமேன்மைசெய்வரேபெரியோர் ௫௰

உதவாமை

சாய்ப்பால்சொரிந்துமென்னநாணல்மிகப்பூர்த்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்னபேடிகையிலாயுதமேன்

எட்டிப்பழுத்துமென்னபூண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற்பண்ணிழந்துமென்ன

சற்குணமில்லாப்பெண்தங்கநிறமாகியென்ன
மிக்கசபைக்கோழைமிடிகல்விகற்றுமென்ன

ஆட்டின்கழுத்திலகாதுநீண்டென்ன
காட்டினில்வெரித்ததென்னகானலிநீர்கண்டுமென்ன

வேசைக்குப்பொன்கொடுத்தேன்வீணருக்குநன்றிசெய்தேன்
மாசடையவறபருக்குவந்தென்னநிகாரம்

காட்டுக்கரடிமயிர்கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்னநெடுக்குறையிலென்ன

இத்தனையாய்ச்சொன்னவிருகெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்வுக்குவொத்திருக்குந்தப்பாதே

தேகியென்போர்க்கீயாதேதடர்தமக்குபொருள்
ஆகிவந்தாலுமென்னஅழிந்துபோனாலுமென்ன

பேடிபழகுகண்டுபெண்கள்மகிழ்வதும்
கேடுவஞ்சர்சொல்லைநிசமென்றிருப்பதுவும்

காணலைகண்டேயோடுங்கலைமானுஞ்சாவையிர்ப்
பாயிலவுகாத்திருந்தபச்சைக்கிளியதுவும்

தேனருந்தத்தாழைமலர்சென்றசுரும்பினமும்
தானுயர்ந்தேதென்கண்டுசெப்பாணிமெய்ப்பதுவும்

புல்லாகமனின்தாழ்வுகண்டுபுகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்றுமனுநூலுரைத்திடும்

மனுநீதிகாதல்.

இல்லாமலேட்டினிலேகண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையாகளுறவுசதமென்றிருந்தும்

மறுதேசம்போனபிள்ளைவஞ்சருடனேனேசம்
வருமென்றேயன்னியர்பால்வைத்தபொருள்பலதும்

தன்னைப்பெறுதொருதந்தைதாயானவரும்
பின்னுடன்பிறவாப்பின்னவர்கள்முன்னவர்கள்

பேருகத்தம்வயிற்றில்பெற்றவளர்க்காதபிள்ளை
ஊரகருடையசெல்வமுள்ளன்பிலாதபெண்டிர்

சத்தியமாயிராறுந்தருணுதருணமது
உற்றசமத்துக்குதவாதுகண்டீரே

ஆற்றிற்கரைத்தபுளியனலிலேபோட்டவெண்ணெய்
காற்றிற்பரந்தபஞ்சுகாட்டிலெரிந்தநிலா

விரிந்தகமரினிலேவீழ்ந்ததொருவெண்பாலும்
பரிந்துகடற்சுழியிற்பாய்ந்தடைந்தகப்பலுந்தான்

சுட்டமண்ணுணதிலேதெளிந்திட்டபந்நீரும்
இட்டமுடனவிழலுக்கிறைந்ததொருநந்நீரும்

வீணருக்குச்செய்தநன்றிவேசைக்களித்தபொருள்
காணுமிவையத்துங்கைக்கூடாக்காரியமாம்

சற்பாத்திரமறிந்துதானஞ்செய்யான்தருமம்
உப்புகால்தனிலுமுவர்நிலத்திற்பெய்தமழை

பாம்பின்வாய்த்தேரைபரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவிவேந்தரிடஞ்சேர்ந்தபொருள்

தானமாயாவருக்குந்தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருள்நமன்கைபுகுந்ததொருமன்னுயிரும்

ஆனைவாயின்கரும்புமணைகடந்துபோனவெள்ளம்
வானிலத்திற்கொள்ளையிற்றிலாதையிலும்போனமுதல்

வையகத்தில்வொன்பதுவும்வாராதுவந்தாலும்
அய்யோருலுத்தவனைக்காசுமியானும்

கவரிமான்மயிருங்கற்புடையாள்தன்னியமும்
அசையாதவேங்கையின்மேற்றிருரான்கைமேலும்

ஆனாலுமேலாம்பொருளைத்துமவராவுயிர்கள்
போனாலேயன்றிப்பொருட்பாதிலுமட்டாதே

கண்ணுக்கழகேட்டிக்கனிதாழையின்கனியும்
வன்னமுருக்கின்மலரிலைசாலேதுபயன்

தாழைமடலோபெரிதுசண்ணமலர்மடழாம்
தாழைமலர்வெய்யோன்காய்கைபட்டால்வாசம்போம் ௫௰

சண்ணமகிழ்மலர்சருகாககாய்ந்தாலும்
வின்னமில்லாத்தனமணமும்விட்டகன்றுபோகாது

ஆழியில்நீரதிகமள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவருமந்நீருறன்னீராம்

இங்கிவற்றைபொப்பாகயீகைசற்றுமில்லாதார்
அங்கம்பெரிதாயழகாயிருந்துமென்ன

தேசமதுவில்லாவிடினுஞ்சிறியவுருவானாலும்
பாசமுறுசற்குணமும்பலர்க்குதவியேபெரிதாம்

வேசையர்கள்நட்பும்விளக்கினதுவொளிவும்
மோசமிலேயிவவிரண்டுமொன்றுகுமென்றனரே

கைப்பொருளற்றால்வேசிகடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகயெண்ணெயற்றால்விளக்கொளிசற்றுமில்லை

நற்பிறப்புத்தமர்

பாவபுண்ணியமறிவார்பலபொருளுமிச்சியார்
பூவைபலனேக்கார்புராணநெறியுணர்வார்

மாதவங்கள்செய்வார்வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடாராயாதுதுன்பத்துக்குள்ளாகா

உய்யவேவயில்வாருடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச்செப்பினொமுன்னோர்கள்

மாதாபிதாகுருவானவரைத்தெய்வத்தை
மீதாய்பணியும்விசுவாசமுள்ளவர்கள் ௬௰

தன்தாரமன்றிமறுதாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்ததிதிபூசைபுரிவோருமே

சத்தியமொழிபூர்வதர்பரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச்சோலையதுவைத்தவரும்

பார்க்குட்சகாயமதாய்ப்பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல்மண்டபங்கூவமவாரு

செய்யுமகாபுண்ணியத்தேகாமுத்தமர்க்கு
எய்யாமலேபோலேயாதுதுனபயவந்தாலும்

வெய்யில்தனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்

தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறுசிப்பிமுத்தும்

பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னயஞ்சேராவின்பால் நற்றாசுபட்டதுவும்

ஈதுபத்தானவகை யெங்கேபிறந்தாலு
மேதைபெற்றாற்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன

உப்புங்கர்ப்பூரமது வொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கற்பூர முயர்ந்தவிலையாகுமன்றோ

எல்லோருக்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
எல்லோர்தமக்குரிய ராவாரோபாவிகள்தான் ௯௱

பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்தினோசை விதமாகுங்கண்டீரே

நல்லதங்கக்கரத்தி னுதம்போற்சீராக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள்

பன்றியைக்கண்டால்யானை பாதைவிலகுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால்

அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்வதுவாம்

நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுகென்ன கண்டனைகள்செய்தாலும்

முக்குணமேகாட்டு முறைபோற்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணம்போகாதே

சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை

காலைதுயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்லுவனும்

உற்றோருண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே

உற்றபசுவானதுவு மோர்கன்றையீனும்
பத்தான குட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான் ௯௱௰

கோரமதுசெய்தவற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாச்சற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி

வங்கிஷமும்விர்த்தியாம் வன்புவியின்மே ரத்தாள்
பங்கமு குட்டியது பத்தீன்றும்விர்த்தியிலலே

நன்மைதுன்மைரண்டுமிந்த நாட்டினுக்குத்தாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர்

தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்களேயோடுணவு

பெரியோர்கள்சேர்வைகுலப் பெண்ணுளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி

தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்தவமு
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்

வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்புபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்

காரானைதந்தங் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்

நாயானதுசினந்து நமைக்கடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில்

அறிவில்லாமூட னேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும் சஉய

சற்குணத்தினாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வாராதவர்கள் துடங்கினதுங்கைவசமாம்

தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பாகதியுமுண்டாகும்

சற்பிறவிதுற்சனர்.

எண்ணுமல்யாதொன்று மியார்க்குமிடாசெய்வார்
எண்ணற்கொலேகளவுக் கிறைச்சிமுதலானதுண்பர்

பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்சுகியிலலா ரிராட்சதக்கணமாகும்

அஞ்சார்தனிவழிக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்வெல்வார் வலியாரையானாலும்

ராபகலுமாறுமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்

மாதலத்திலிந்த வன்னெஞ்சிடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாருமென்றனரே

கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குப்பத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்

வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந்துற்சனரை
கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடநலம்

பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேனதக்கு விஷமதுவு வாலினிலே ௩௧௰

துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர்

வேம்பிற்கசப்பும் வேவாமருக்கொழுந்திற்
சோம்பாமணமீண்டுந் தோன்றும்போதுண்டான

வாறுபோல்துங்குணமும் வாய்க்கபுகழ்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது

நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுங்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும்

கண்ணில்மறுகாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனற்கு வாராதுநற்குணந்தான்

எல்லாருந்தூஷணிக்க வெந்நாளுங்கோளுரைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெறியுமக்கினியாம்

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லாற்சொற்கேட்பதுவும்
பொல்லோர்குணமுரைத்த போதிலேதீதாகும்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
சாமியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது

தலங்கள்நினைத்துதியார் தர்மகதைகேளார்
துலங்குநதியாடார் சுவடிவாசித்தறியார்

வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவறை நேத்திரத்திற்பார்க்கவொண்ணு

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது

சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது

சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிகத்தேய்த்தாலும்
காணுமொளிவொருக் காலுமதுமங்காது

பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்

ஆதாரவின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதவழுவார்கள் நிறையுந்தவராரே

ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமநிகராம்
தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
சின்னமென்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார
சார்ந்தவரைக்காப்பவர்கள் தன்புருஷமேருவாம்
வய்ந்தமனமறிந்து ஈவார்புருஷரதனம்
பாராவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரேசேரார பண்பாம்புருஷசிங்கம்
தாய்தந்தையாலுஞ் சமன்செய்தகோலதுபோல்.
ஞாயமுறைப்போர்புருஷ் நாயகமென்றேயுரைப்பார் கூருய

ஈகை,

நூறுவற்றிலூற்றாறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனைராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்
நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிறையுமுண்டு
இவ்வகைபோலீவோருக் கேதிடர்கள்வந்தாலும
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்வராம்
எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோ கூடும்பெருஞ்செலவம்,
வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம்
தாரித்திரத்தாற் றயவில்லார்தம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்
ஈயுமுதாரனைத்தா னெப்போதுமவேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும்

ஈகைக்கிடையூறு.

தேனிடத்திலீயுமுண்டு ஜலத்தில்முதலையுண்டு
மானிடத்தின்வீடுகளி லண்டவிடாநாய்களுண்டு

சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெங்கமிகுதாழம்பு கிள்ளவென்றால்முள்ளுமுண்டு
கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டோகண்டீரே ௩௯

குற்றமுறைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந்துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும்

சிநேகம்

மதியிலாருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாய்
வாவிதனிற்கோடிகளும்மந்நீர்போற்றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும்
சேரும்பெரியோர் சிநேகமிவ்வாறாகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

சரீரசுகம்

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார்
ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகத்தின்னார்கள்
தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள்
மலநீரடக்கார்கள் மடப்பள்ளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்
காய்ச்சுபால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
ஏச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார்
ஆறுதிங்கட்கொருவிசைதா னவிரேசனமுன்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவாரும் ௩௭

உண்டபின்புலாவி யுதகமருந்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு
ஏர்க்குமுடல்தனிலே யெப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் சேமமென்றுசெப்பினரே
மாறுபாடில்லாமல் வயிறறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி னோயணுகமாட்டாதே

நோயணுகல்,

கல்லால்மயிராலுங் கடுகிநடையாலும்
நெல்லாலுமியாலு நித்திரையில்லாதாலும்

ஒழிபாவிசாரத்தா லுண்டபின்புமுழ்கையினால்
கழியுமலசலங்கள் கக்கிஷமாய்வீழ்கையினால்

பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமைத்தல்
மின்னாருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

மெய்யவனம்வேலையினால் வேர்வைபணிக்காற்றினால்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனிவுணர்வு

ஏர்க்குங்கிழங்குசரு கிலைவிரும்பியுண் ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென் றுரைப்பார்

காலையிளம்வெய்யிற் காய்வோர்பிணமகனின்
மேலேவரும்புகைதன் மேலேபடுவார்கள்

தன்வயதுக்கேமூத்த தையல்தனைப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள் ௪௮௰

நால்வரிடந்தனிலே லட்சுமியுநிலவாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றார்

இறந்து மிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைச மாதைமணஞ்செய்தவர்கள்
தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்
வரியோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்ரரைப்பயின்றோர்
காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலோயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்
சீரானகோயுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்
வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொற்கத் தலமீதுறைபவராம்

இருந்து மிறந்தவர்

நெடுநாள்மருகன்மனை நீக்காதிருந்தவரும்
அடைவாய்வருமகன்றா னம்மான்மனைதனிலே
சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே
இதமாய்க்கவிபாடி யிரக்கப்போம்வாணர்களும்
பொய்பேசிக்கடன்வாங்கிப் பிழைத்துத்திரிபவரும் ௪௯௰

மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெய்துந்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர்

மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறிசற்றும் நிங்காக்கவலையுற்றோர்

சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்பேசி வீண்வழக்குசெய்பவரும்

மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையானராசசபை மூடராய்ப்போனவரும்

ஈரேழுபேரு மெண்சாணுடல்படுத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தப்பிணமாமவர்கள்

சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேயையமெடுத் துண்ணல்மிகவுநன்றாம்

ஆனதிருமா தகன்றுவருமைவந்தால்
ஞானம்போங்கல்வியும்போம் நாடும்பழித்திடுமாம்

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாந்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்

மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமுரம்போம்
உய்யவிரிந்துவரி னுயிரேடேசெத்தபிணம்

மேன்மையறிவுகுலம் விந்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிறந்து போவதுவேமெத்தநலம் எஅ

சேனைமருந்துசெய்யுந் தீராவியாதியுற்றால்
மாநிலத்திற்றனுக மாளுவதேயுத்தமமாம்

பொருளின்பலன்.

பொருள்தேடதுக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதாம்
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமாம்

காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட
மோகமுடன்காகமுந்தான் முட்டையென்றேஎண்ணுதல்போல்

ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்து
போயலைகின்றதொரு புததியினம்போலும்

சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்

மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்
மயலாகபொருளுமல்ல வவன்பொருளுமல்லவென்பார்

உற்றபொருள்தேட மனமுற்றுலகமுமை
நற்றுதஞானிக்கு நாடெல்லாந்தன்னுடைமை
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுக்குரங்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார்
மன்னுங்குரங்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார்
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொனொருமசக்கம்
பொன்னுசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை ௭௱௰
வெட்கமில்லைபோகலாம் வேளையின்னதெனறுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே

பொருள்வகை.

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுககிலந்த நெல்லுமற்றுபோவதுபோல்
ஏலநமக்கு மெழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி
மாசவருடமென்று மாதத்தொகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்
இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களை
சீதேவிபூதேவி சிரிப்பாரிவன்றேனீயாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்தனுநூலோர்
மிக்கதர்மம்பொருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடுபொருள் நல்லறமுமின்பமுறும்
வஞ்சனையாய்த்தேடுபொருள் அத்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்மதனையுண்டாக்கும்
கூத்துபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும்
கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போல்போய்விடுமா மைஸ்வரியமுள்ளதெல்லாம் ௭௨௰
புண்ணியமெந்நாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாது

நல்லறிவுகயவர்.

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணூர்
அன்னைசுற்றமவிலக்கி யயலார்க்குதவுபவர்

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றிருப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவரும்
கண்டாலுறவாடிக் காணாவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாளசெய்யுங் குறையைவெளிசெய்பவரும்
பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பவருஞ் சபையிப்பயனில்லா
வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தயன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே
அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்நகுயிர்தரலாம்
வெல்லரியபேயனையு மிரட்டிபேயோட்டிடலாம்

பறவைமிருகப்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செய்திடலாம் மறலியிடதூதரையும்

மணலைக்கயிறாக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே ௭௫

வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளுப வளர்த்தாலும்

புல்லறிவுகயவர்.

சாதிநுணங்காட்டுந் தகமைபோல்புல்லருக்கு
எதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராது

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமிலை சுற்றந்தனைநோக்கார்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே

உண்டென்றுநாளுமுலகமுரைப்பதனை
திண்டிமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம்

தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயற்றிற் செரியாதவாறதுபோல்

சண்டாளரானவர்க்குத் தர்மநூலதனை
விண்டாலவர்செவியில் விழாதொருநாளும்

புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வலுக்குங்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க

அன்றுபுலிபோனவுட னக்குரங்கையவ்வேடன்
கொன்றுதின்றவாறுங் குலமருக்குச்செய்தநன்றி
துற்சனற்குசெல்வ வந்தால் துன்பம்பழிபாவம்
அச்சமற்றுச்சற்றே யணுவுநினையாராம் ௰௭௪

தூங்கினதுவாலில்தேள் கொட்டஒருகொள்ளிதனைக்
காங்கொடுக்கவூழித்த கதையாகுமென்றனரே

வெந்தழலில்தேளெடுத்து விட்டவனைக்கொட்டுதல்போல்
நந்தாததுறசனற்கு நன்மைசெய்தாற்றீமைசெய்வார்

நாய்தனக்குபொற்கலத்தில் நற்பாலின்சோறிடினும்
நாய்பிறர்களெச்சில்தனை நக்காதிருக்காதாம்

புல்லறிவுவாளருக்கு புத்திமிகச்சொன்னாலுஞ்
சல்லியவருடைய சாதிக்குணத்தைவிடார்

காலின்செருப்பதனைக் கனகமதாற்செய்தாலுங்
காலுக்கேயன்றியது கழுத்திற்குயாகாதே

கீழ்மக்களேமிகவுங் கெர்வித்திருந்தாலும்
மேன்மக்களாகார்கள் விள்ளுவதிலெதெரியும்

நாடிவெகுவாய்ப்படித்தும் நல்லறிவில்லாவிட்டால்
மூடரினுமூடரென்று முன்னோருரைத்தனராம்

ஏதுமறியாதா ரின்பவறிவுள்ளாரெல்
ஓதும்பெரியோருக் கொப்பென்றுரைத்தனரே

கல்வியறியார் களர்நிலத்துக்கொப்பவர்க்குச்
செல்வமதுவந்தால் தீங்குசொல்வார்யாவருக்கும்

தேர்கோபுரத்தினிலே செய்தபதுமையவர்
பாரிலவர்தமையும் பட்டமரமாகுமென்பார் ௭௫௰

யார்க்குமுபகாரஞ்ச லியாதுமிகச்செய்தபின்னே
ஏற்கமதிற்செய்யவில்லை யென்றுநினைத்தாக்கால்
வட்டிக்கடன்கொடுத்து வாங்குபவனையெனலாம்
கட்டாகச்செய்தவுப காரமெல்லாமவீணாகும்

வரம்பிலாமை.

வேசைக்குறவில்லை வேந்தர்க்குற்றாருமில்லை
ஆசைக்குவெட்கமில்லை யன்பில்லைமூர்க்கருக்கு
பணமதுவுமில்லார்க்குப் பாத்தையாமேலாசையில்லை
குணமில்லாதார்க்கின்பங் கொஞ்சமதுஇல்லையில்லை

ஞானிக்கிசுகமுமில்லை நாட்டிலோர்சதியில்லை
ஈனமிலேச்சர்களுக் கெப்போதுநினைவுமில்லை

காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை

சத்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகலவாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

புல்லறிவு

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவுமபயங்களேது சுத்தவீரனுக்கு
பொய்யனுக்குச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேயரில்லை
தான்பிடித்தபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆன்சபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம் ௭௯௰

எளியாருடனெதிர்ப்போனெற்றகடிகாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்
வந்தோர்முகம்பாரான் வனத்திலுறுங்காடி
பந்தமுறுசபையிற் படுப்போன்கிடாமாடு
அடுத்தோர்கிடர்விளைக்குமவனேகொடுங்கேளாம்
பிடித்தபிடியைவிடப் புல்லன்வெலிசாறை
சற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றவானரமாம் வாய்பேசாவூமையென்பார்
அம்புவியையாளுமரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழைந்தமந்திகூகையறவான்பட்சி
கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்காடி கொடியவன்மிருகம்
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை

பண்டிதாள்பரிட்சை.

முக்கியஞ்சேர்நூலின் முறையும்நிரையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரீட்சைகளையறிந்து
தேடியழைத்தபின்போய்க் தேகஞ்சணங்காலம்
பாடுகின்றநாடிசெட்டுப் பரீட்சைகளுந்தானறிந்து ௭௭௰

சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து

கற்கங்கியாழங்கள் கன்குளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும்

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவவையாமல்

எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்கிவித்து
தெளிவானவாரோக்ய ஸ்நானமிகச்செயவித்து

தந்ததேபோதுமென்று தானமகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்மந்திரியெனலாம்

மிக்கபிணிவந்தால வேணபொருள்தாரனென்று
மிக்ககுலதெய்வம்போல் மேன்மைமிகச்செய்வார்கள்

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்

பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிகாசமைத்துனனும்

ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனும்
காதலுடன்மற்றுநாள் கடனாளியாவானே

அப்பாற்பகையாளி யாவார்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்லோப ரிருப்பாருலகினிலே ௭௮ய

தீராதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேரானபண்டிதரை மேலமருந்துகேட்பவர்பால்

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில்

கத்தது ரோகியர்கள் கண்டதெல்லாம்முண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான்

மட்டில்லாப் பொன்னையள்ளி மாரியெனவீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதற்கே

சுத்தம்.

வெண்ணீருடன்துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள்

செண்ணெல்கவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணும்நவமணிகள்

கோதில்லாவெண்பட்டு கோடிதுகில்பாவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள்

கீழோர்பாலுற்றிடினுங் கீழோர் வீந்தாலுந்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம்

ஆசைமிஞ்சுமின்னு மதரபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் பெய்ந்தசிறுநீரதற்கும்

வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமுந்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்குல் ௭௯

இந்தவகைநாலுக்கு கமச்சிலையென் றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுரைத்தனரே

எத்தொழிலுமெக்கலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

ஆகாமை

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை
ஊரார்பகையு முற்றாருடன்பகையும்
வீரானமந்த்ரிபகை மிகுந்தபணக்காரர்பகை
வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை
பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே
ஆறடுத்தலூதுவ மாசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுத்தபோராறும்
தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமாகாதற்சனர்கள்
தன்னோடிணங்குவதுஞ் சத்ராதிநட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகநேடத்துவதும்
மெய்விளங்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும் ௮௰
நஞ்சுடனேதீமருந்தால் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலகைகளையோட்டுவதும்
ஆர்க்குங்கடலோட மதிலேதானசஞ்சரித்தல்
பார்க்குமதுவுண்ணல் பலநாளகளவுசெய்தல்

இத்தகையாய்ச்சொன்ன இருபதையுமேமனுதி
ஓற்றுவிடாறு முயிர்க்குலயமாதிதுவே

சருர்பமிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்பொம்பதையந்த யோய்ப்பிரிடுவோர்

பிணைப்பட்டுப்பொய்சாட்சி பேசுமிவர்நால்வாகளும்
சுணைகெட்டபேசிவர்கள் துன்பத்திற்குள்ளாவார்

சிற்றார்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணேபெற்றவரும்

அற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலநாளில தொந்தரைக்குள்ளாவார்கள்

அத்திக்காய்கோவைக்கா யவிரவிதற்றுன்காய்
சுத்தவெள்ளைக்கத்திரிக்காய் சோற்றுக்காந்தலிவைகள்

தின்பார்களொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில்

தூக்கோதாரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசுவஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும் அ௱௫

கல்லாதவன்நெஞ்சிற் காணுமிவரெண்மரையும்
நல்லசபையிலொரு நாளுமழைத்துப்பேசவொண்ணு

ஆசனங்கள்தான்போடி லாயிசுதவிர்க்கியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஅயிஸ்வரியம்.

தனக்கெண்ணெய்தான்தேய்க்காற் சந்திகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினார்முன்னோர்கள்

யோகியொருபோதே யுண்பானிருபோது
யோகியுண்பான்மூன்று போதுண்பான்வியாதியஸ்தன்

உடனொருநான்குபோ துண்ணுமவனறனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள்

வீரத்திலொம்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வாறும் விளம்பிடவுமாகாது

வேந்தர்குருபொய்யர் மேன்மையுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல

நாட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராசனுக்கு மேலானமந்திரியை

துற்சனர்சினேகமதை தொட்டாலவரையும் விலு
இட்சணமேமைபந்து மெடுத்துவிடலே வனுமென்யார்
கடன்பட்டுத்தார்த்தோர் கைச்சீட்டிலேமோசஷம்
விடந்தீண்டிமீண்டதிலே வெள்ளவுமோசஷம் அ௨௰
அக்கினியில்வெந்த அருந்தனிலே மோசஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலே மோசஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துயதிலேமோசஷம்
உய்யப்பிணிமருந் துண்டதிலேயின் மோசஷம்
வாணிபோய்மீண்டதிலே கடிகளவுமோசஷமுடன்
ஆணியாம்பத்து மனுவும்வைக்கலாகாது

பலனில்லாமை,

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாகாலூர்
மந்திரியில்லாவாசல் மதகரியில்லாவெமம்பார்

மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதாவி
தக்கதுனபதிகள் தானில்லாவெஞ்சேனே

பெண்ணுரில்லாதமனை பிறவியால்லாதவுடன்
விண்ணுனப்பாடல் வினையமில்லாவேசி

கோப்பில்லாககூத்துடனே கொங்கையில்லாப்பெண்ணழகும்
தாப்பில்லாச்சிவனங்கள் தீந்திகளில்லாவீணை

பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறிபாலகனிபங்கள்

சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு

தேசிகளில்லாவித்தை தியானமதில்லாதீட்சை
பேசரியநல்லரிஞர் பெரியோரிலாதசபை அ௩௰

குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணுசை
வடிவுற்றுவாசமில்லா வானமிதுமலரும்

சேகரமில்லாக்கதை தீபமில்றாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போசனமும்

கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணுங்கில் வருப்பயன்களொன்றுமில்லை

தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும்

வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டிர் மேன்மையில்லைகஷ்டம்வரும்

அன்னையிறந்தாலுணவானதெலாம்கஷ்டமாம்
பின்னைப்பிதாவிறந்தாற் போனவித்தைநஷ்டம்

உற்றதுணையிறந்தா லுடலிலபாதிநஷ்டம்
மற்றுமனையாளிறந்தா லன்றுதலைபோனதென்பார்

பருவம்போயப்யாமம் பண்ணுவிக்கும்விந்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணாளும்

அத்தரித்திருக் கழகுடையபெண்டிரும்
இத்தனைமூன்றினு மெய்துப்பலனில்லையே

வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுன்சோர் பிசாசுக்கிடும்பூசை ௮௯

பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போதவிக்கான்கினிலும்
என்னபலனுமில்லை என்றனரேமுந் நூலோர்

அத்தணர்க்குமாவார்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன

யார்க்குமுறையாதவித்தை யனேகவிதமாகப்
பார்க்கும்படித்தென்ன படியாதிருந்துமென்ன

என்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல

தன்னால்நிருவகிக்கத் தசரதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யிடறுவருமுத்தியில்லை

தகுணமறிந்துதவாத் தன்மைசேர்நட்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணாளும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்தென்னநீங்கிலென்ன

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வயுசெயுடனணிந்தால் வையத்தோரேசுவார்

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது

பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிகாணாரென்று நவின்றார்மனுநூலோர் ௯௰

தெய்வதவங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்
மெய்யென்றுரைப்பவற்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே அருய

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றுகுமுத்தமமாம்

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமாம்பின்பு
பலந்தருதல்போலகொடுக்கும் பண்பதுவேமத்திமமாம்

வருடமெலாம்பாடுபட்டால் வாழையொருவிசைதான்
தரும்பலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்

தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாலிவ்வாழ்க்கை

வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளந்தரவுமாட்டாதே

மாரிகாணாதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏறிகுளமில்லாவூ ரிரவிகாணாவசனம்

அன்னைகாணாதபிள்ளை ஆவினைக்காணாதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணாதவுடல்

காவுகாணாதவண்டு கலைகள்காணாகுமரன்
மேவுகொழுனனில்லா மெல்லியர்களானவரும்

தோழர்காணானேசர் சோடுகாணாப்பேடு
மீளுமதிகாணாத வெண்குமுதமானதுவும்

பெரியோரில்லாதசபை கபண்கள்தனில்மூக்காள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாமிவைகள் அசூய

தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணாவிளமை வாறுகுமென்றிடுவார்

நல்லோற்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்நன்றி பொய்கையுறும்நீரெழுத்தாம்

சுற்றமுண்ணாயில்வாழ்வுஞ் சுகியில்லாணபாடுவதுங்
கற்றறியானபாடுகவி கைம்பெண்ணிலையழகும்

துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணாம்பலனிலையே

ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமவென் றுபாவிகட்குச் செய்தவுபகாரம்
மேலுமுவர்நிலத்தில் விதைத்ததொருநலவிதையும்
சாலவிவைமூன்றுற் றுத் தண்ணீர்க்கரைத்தபுளி
குதிரைக்கிறுவுத்தன் கூறுகவிப்புலவன்
கதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்
வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காஙசயாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால்

எத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம பண்பாம்பலநில்லையே

தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ அஎ௰

பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன

சிவன்மாலையுத்திதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ

தினமும்புராணகதை செவிகேளாதென்னசெவி
முனையானபுண்யநதி மூழ்காததென்னவுடல்

மேவுமிவையெட்டு மில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்

ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானுகிவிவேகியுமாய்

மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்திவான்
உகராணவீர னுபகாரியாவருக்கும்

இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைச்சொல்லவெண்ணு

சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷம் பிறப்பிற்கழுதையுமாம்

லோபத்தனம்.

தேன்றுளியொன்றுற்கடலைத் தித்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும்

பூவினால்வச்சிரத்தைப் பேர்த்துத்துளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும் அஅ௰

ஊமைபடித்தினு மூக்கமில்லாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தைரியமுண்டாயிடினும்

நித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே

தின்னாமலுண்ணாமற் றேடிமிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்கும்லுத்தர்பொருள்

தெண்டம்பெரும்பிடிக்கும் தீககுந்திருடருக்கும்
வண்டமனைவேசைகட்கும் வலுவந்தக்காரருக்கும்

இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேஈயா வுலுத்தர்பொருளதுதான்

ஆகாப்பதரெனினு மரியவிபூதியைவிளைக்கும்
வாகாப்பழஞ்சுவரும் மாடுறைஞ்சுமுன்மறவாம்

மாடுகெடாவதுவும் வையகத்திலேயுழவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்

செத்தபிணமானாலுஞ் சிறிதுவுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையாம்

கல்லாலேயாலங்கள் கனத்தபணதியுண்டு
அல்லற்கழுதையென்றா லழுக்குப்பொதிசுமக்கும்

வாறுகோலானாலு மாளிகையெலாம்விளங்கும்
பேருய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும் அகூ௰

ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்

நெல்லிற்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன

சீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்

தயவாயொருவயற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்

உச்சிதமாயார்க்கு முதவில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுஊரில்நிற்பதொக்கும்

செத்தபிணமதனைச் சிங்காரித்தாலதென்ன
கைத்தலத்தினாலிழுத்து காட்டிலேபோட்டுமென்ன

ஞாயானதுகொழுத்தால் நாட்டலகையார்புசிப்பார்
ஈயாதலோபியர்க்கு எல்லாமிருந்துமென்ன்

ஈயா யில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேயிருக மதனிலேசோக்கவென்றார்

இகழ்ச்சியீனம்

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும்

ஆதரவில்லாதபெண்டீ ரருமையில்லாசேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைபெற்றதுவும் கூா

ஊழிவினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவீரைந்தும் வதையாகுங்கண்டீரே
நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழையாய்ச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்
மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானும்
தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
ஒக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தல்நன்று
தூயவறிவில்லாச் சுகரைப்பெருவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று
உள்ளன்பில்லார்க ளுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தால்நன்று

வெளிவிடக்கூடாதவை

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடககமுற்றபொருள்
மானம்பிறர்மான மறந்துடனேதான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தனத்தினன்வினையும்
இல்லறத்தின்கேவர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணாதீனமென்று சொன்னார்மநுநூலோர்
தன்னகத்தாளன்றுமது தாரமேலாசையுற்றால்
யின்னொருவர்தாரமது பெண்டீரைச்சேராரோ கூாய

பறையன்பறையநல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்ப்
பறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுன்னூலோர்
ஞானமுஞ்சற்குணமு நாளுமில்லான்கற்றகவி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்

தண்ணீரிநன்மை தறையுவற்றினாலழியும்
பெண்ணார்கள்நன்மை பிறர்கமலத்தாலழியும்
கோதில்லாமாதவசு கோபத்தினாலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும்
மன்னவர்கள்நன்மை மனுநீதியாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி
பொல்லாதன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னால் மனுநூலுரைத்தனரே

பருவதமும்பார்க்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியானும்வாழ்வதுபோல்

பூமியிலேதங்கள்மனைப் பெண்ணாள்பிறந்துவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

கேடு,

காவலர்கலாணை கடப்பதுவுமேயடங்கா
நாவுமிகுகோ:ரமுட னமதுரைகேளாவடிமை

ஆதாயமின்றி யதிகச்செலவுகளுநம
காதாரக்கேளாச்சொல் கவியிலமிச்சங்கண்டெழுத்தும் ௯௨௰

சாட்சிமிஞ்சும்வழக்குந் தயிரியமிஞ்சுங்கவலை
பேச்சில்சரசமிஞ்சப் பேசுபரிகாசமமும்

பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிடதுன்பமுமாம்

ஓரவிகாரமா யுயர்ந்தோர்க்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேயசுமக்க உலகமதுநடுங்கும்

உப்பிட்டபாண்டமிலே யுதிரந்தமாம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ மூற்றார்பெற்றார்பாழாம்

மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வள் முடிவில்நரகமெய்தும்

என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிறியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம்

வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசாராய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும்

தேடாப்பொருளழித்தல் தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றுய்வாராதே

ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால
மானோர்மேலாசைதரும் வாழ்வும்போர்துக்கமுமாம்

என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுடிவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை ௬௩௰

இமிசைபட்டாற்று தேழையழுதகண்ணீர
வமிசத்தைத்தேய்க்கு மாமுங்கூர்வாளெனதால்

தீங்கானவாங்காரஞ் செல்லுமிடமால தன்றித்
தாங்காவிடஞ்செலுத்தல தப்பாமற்கேடுவரும்

தாழ்ந்தாருயர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்

சரியானபேரைபன்றித் தன்னிலதிகபல
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்

இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதகம்
புத்தப்பிரதானபாய் பொல்லாங்குசெய்வார்கள

புத்திரர்களில்லாமற் போவதுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயிசாவார்கள்

ஏர்க்கையுடனிதமு யேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலேதுன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளோர்கீரியினா லந்துகுடிக்கெட்டதொக்கும்

சத்ராதிசொல்லைத் கனதாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும்

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணாமற்பேசினவர் ௬௪௰

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுபாராதார்

இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள்

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரெழுவருங்கெடுவர் பேய்நாய்ப்பிறப்பாகும்

கூடிப்பிரிவதினாற் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவுந்
திண்ணமுடன்முன்பின்னாய்ச் செப்பினார்கேளிவரும்
வித்தமகன்மஸ்வரிம மேதுங்கிளைகூட்ட
மற்றும்பயருழியி னாலுமகிட்சியினால்
ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தால்
தீர்க்கமிடிகேடுவருந் திண்ணவனார்வள்ளுவனார்
நெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குகேடுவரும்
தினைகளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணுப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால்
அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதுபொல்லாங்குசெய்த
நிந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார் ௩௫௰

ஆவலுடன்தன்பிழைப்புக் காகாவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செல்வாரேயாமாகில்
நீண்டதொருதன்நிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறானாலு மவரைவிட்டுப்போகாது
முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னாலேழுவேழ் பிறப்பும்விட்டுப்போகாது
செய்ததொருதீவினைதான் செய்தவர்கிகெப்போது
மெய்துமென்றுசொல்லி விளம்பினாவள்ளுவரும்

அரிது.

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடுபேடும்
நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள்
வாராதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோய்த்தரிக்கிறது நெஞ்சேற்றரித்தாக்கால்
நீணிலத்திற்குன்றாமல் நெடுநாள்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே

இனிது.

இனிதினிதுவேதாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணுக்கண் ணேதுங்கேளாச்செவியே

கொடிது,

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவறுமை ௩௬௰

அதிற்கொடியதர்மருந்தி லகலாதவெல்லியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்
அதனில்மகாக்கொடிது அடங்காதபெண்சாதி
அதனிற் காடிதுண் டவளோடுறங்குவதே

பெரிது,

பெரிதுபெரிதிந்தப் பேருலகநான்முகன்றன்
வரியைப்படைப்பாகு மவன்மால்வயிற்றுதித்தோன்
மாலோகடலதுயின்றோன் வாரிகுறுமுனிவன்
பாலெடுக்கமாமுனிவன் பண்டொடுக்குங்கும்பமதில்
கும்பமோபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணுமை
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு
சேடனுமையாள் சிறுவிரலிணுழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்
தொண்டரிதய தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம்

முக்கியமுள்ளது.

தவத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பிலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில்
வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு

நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவதிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணமாம்

வாரத்திலாதித்த வாரமந்தகான்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியில்நாரதனும்

தனத்திற்குபேரன் தானமேதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபார்கடலாம்

மோகத்திற்புஷ்கரமாம் விலங்குகளிற்சிம்மமுமாம்
யாகந்தனிற்சிரேஷ்ட மச்சுவமேதமென்பார்

மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுபசுவில் கங்கைநதியாம்நதியில்

தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாந்
தயனியமாம்லோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம்

பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிவதனிலோதியாம்

கற்பிலருந்ததியாங்கபிலபாஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும் ௩௭௭

அசுரர்குலத்திற்பிரகலாதனனையுத்தமாம்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும் ௩௭௮

சங்கினத்திற்பாஞ்சசன்யன் சந்திரனுங்கிரகத்தில்
சங்குமபதவியிலே சாயுச்சியமாகும் ௩௭௯

போகத்திலிந்திரனும் புஷ்பகமாமவர்மனத்தில்
வாகொத்தவில்விறத்தின்வாழ்விலேமைந்தர்களாம் ௩௮௰

உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதான்கர்னன் குணமூன்றிலசாத்மீகம் ௩௮௧

மன்னும்புராணத்தில்மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம் ௩௮௨

ஆடுமீனிராறிலதகந்துலாமாகும்
வாடாதநுண்ணிய நூல்வள்ளுவனாற்சொற்குறளாம் ௩௮௩

சுவையாரிலேலவனந்துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடக் தேசத்தில்சோழதேசம் ௩௮௪

பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம் ௩௮௫

ஓசையிலிடியேறு ஊரில்யோக்கியதாம்
ராசரிலராசாதிராஜனுமவிககிரமன் ௩௮௬

அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமே
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே ௩௮௭

கொடுமையாலழிந்தல்

தக்கனிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்நிதியும்
மிக்கானவூர்குலங்கள்மேனுளிலேகுலன் ௩௮௮

பந்தமுறுகின்றசிசுபாலனானவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானார்கள் ௩௮௯

கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவிமாரீசனுங்கவந்தன் ௩௯௰

பூதகியசோமுகியும் பொல்லாதசூர்பனகி
வாதுபுரிந்தந்த வக்கிரனுமென்பவனும் ௩௯௧

சகடனுடன்வில்லவனுஞ் சலேந்திரமகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனுளதர்சூரன் ௩௯௨

வஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
மிஞ்சகத்தினலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார் ௩௯௩

மனுநீதிகாதல்.

சூரனுடன்தாருகனுந் தூர்ப்பானுகோடனுடன்
வீரமிருசிங்கமுகன் மின்னுளசோமுகியும ௯௯௪

தீயராமந்தத் திரிபுராளானரும்
மாயமதுகைடவர்கள் மாயாவிதுந்திபியும் ௯௯௫

மாலிசுமாலியுடன் மகிடாசூரன்சம்பரம்
காயகேயாநிவாதகவசருடன்தாடகையும் ௯௯௬

இடும்பன்பகாசூர னிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சதரால் காலகதியாலழிந்தார் ௯௯௭

தாசியங்கம்

புருவனெறியாமல் விழிபுரளாமலேமெயில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல் ௯௯௯

அணுவளவுத்தலையசைக்காமலேமிடறு
தனில்பொருளாமல் சுருதிதந்தியலக்கியானம்

நீதியாய்த்தொனிவீணைநேராயதிற்றந்தி
நாதமிட்டுப்பூசைரண்டுஞ்சரிபாகம்

அமுர்கரசதாளியாயமதுரசங்கீதம்
சுபாசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுபர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலபிநயமுங் காட்டுபவளேபாதம் ௲௩

பாதாளச்சுருதியங்கம்பாங்காகவேசெய்து
வாதாளஞ்செய்பவளை ரத்தடியாமென்றிடலாம்

பலராககீதங்கள் பாங்கான்தாளங்கள்
நலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்

தாளத்திலேநினைவு தரித்துநடனமிடும்
வாளுற்றசற்பாத்ர மறிவனேநட்டுவனும்

தாளலயமார்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பணைச்சேவை விழைவோன்பரிசனனும்

வேசையர்தமில்லம்விட்டு மேலவிடமுஞ்சென்றக்கால்
காசுபணமற்பமுமாய்க்கணிசந்தலைந்துவிடும

வேசையர்கள்வரலாறு.

மிக்கவிலைமாதர்வீடுசந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம்படுக்கைவீடென்பதுகாண்

சந்தியிற்பாய்மெத்தைதாந் தண்ணீர்பந்தலதாம் ௲௯
புந்தமுறுதேசம் படித்துறையதென்றிடலாம்

சூதாடுசோலைதுகில் துடைகள்தண்ணீர்பந்தல்
மீதிலேகட்டிவைத்த மிக்ககதலிமரம்

மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்துகடையெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிற்கொப்பாகும்
ஏகுமவள்மோசமது எட்டிக்கனியெனலாம்

பாசமுடனிவ்வாறு பாங்குடையார்தீங்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால்பங்கமடைந்தவர்

சந்திரனுமிந்திரனுந் தன்னு விற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்

எண்ணறியவாழ்வுடைய யிராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்

சுந்தோபசுந்தரென்னுஞ் சூரிருவர்களும்
அந்தமிகுமோகினிமேலாசைகொண்டுமாண்டார்கள்

வையகத்திலொப்பில்லா மாபிலனுமெழில்சேர்
தைபலரைக்கண்டால சவுரியமுமில்லாது

மாதர்குணங்குறியிவ் வாறெதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால்தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கிபரிபாலனஞ்செய்தவர்

ஆதியருந்ததி மின்னளநங்கவுசிகையுஞ்
சாதுகுணச்சாலை சந்திரவதியென்பவளும
உத்தமியில்மிக்காக வோதுநாளாகியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனமேசெய்தவராம்

மூன்றுயுகத்திலும்யமனானோர்

கிரேதாயுகத்திற் றெடுகாலிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலேசீதைபெனும்பெண்ணாகும்
துன்னுதுவாபரத்திற் றுரோபதையேகூற்றவளாகும்
இந்நாள்கலியுகத்தி லில்லமேலாங்கூற்றுப்பெண்

பெண்களுக்குசுவாதீனமில்லையெனல்

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றுவறுமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்
மூக்காலும்பெண்ணுக்குமுயர்ச்சியொன் றுமில்லாதால்
மிக்கானபெண்சன்மம் வீண்சன்மமாகுமென்றார்

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
வரிதானவான்சன்மத்திதிகமென்றுசொல்லினரே

பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளுற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்

மேந்தவழகுடனேமேன்மையுள்ளவின்னுமேளோர்
புத்திரனைப்பெற்றவன்றே பேரழகுமேன்மைகளும்

பெண்கள்வரலாறு

மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரகாகாப்பேருமில்லை

சதிராய்த்தன்னில்லவிட்டுத் தனிவழிபோமின்னோர்க்கும்
பதிவிரதாதாபமில்லை பங்கம்வந்துநேரிடுமாம்

சரசகுணமில்லாத சையலரைச்சேரவதிலும்
விசைவாகச்சந்நியாச வேஷமுற்றல்நன்றாகும்

அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ

பேரிளம்பெண்கள்பல பேரைபுணர்வதிலும்
சாரிகையாமவாலையொரு கன்னிதனைச்சேதல்நன்று

துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்கூட்டுநன்றாம்

பெண்ணொருத்திபேசினுற் பேருலகமுமநடுங்கும்
பெண்ணிருவர்பேசினுர் பெருவானினமீனுதிரும்

ஆலைவாரியுஞ்சுவறு மாயிழையார்மூவருக்கு
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி

ஆசைகொண்டாள்போலே யபினயித்துமேலவிழுந்து
பேசுகின்றவஞ்சப்பிரியமரியாமல்

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நன்பினவரெல்லாம்நாயினிலுங்கீழாவார்

கர்மகாண்டம்

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
காதலுற்றச்சொன்னகர்மகாண்டத்தியல்புசொல்வாம்

ஞமில்லாதார்க்குச் சளமாமகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன்

செய்பவுருவழித்தல் சிவசெந்தைவதைத்தல்
வைதுதந்தைதாயை மனம்நோகவேபேசல்

நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மலராதவரும்பூகொய்தல்

திட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குங்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே

நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு

குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவிரைத்தார்

உத்தமரைப்பழித்து உதாசினங்கள்பேசுவதும்
பத்தர்சித்தர்பாவம் பற்றித்தொடர்ந்ததினால்

ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்

கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பிறந்தத் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகத்தட்சணா மூர்த்திமொழிந்தனரே

பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்

குளிர்ந்தமரத்திலைகாய்கொம்புதனைமுறித்தல்
அருந்தமலராப்பூவை யனவரதங்கிள்ளினதால்

மண்டைக்கரப்பன் வாயுவொருதலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனசங்கள்

மாறாய்க்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீறாயவந்தெய்துமென்று விளம்பினார்முனிவன்

வித்தானதையழித்து மேலுமதைத்தின்றதினால்
பத்தியுடன்கன்றுக்குப் பால்விடாததோஷமதால் ௲௫௫

பாலகரையழித்துப் பச்சைமரப்பிச்சுகளைச்
சாலயிளம்பயிர்கள் தனையழித்ததினால்

மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமந்தரில்லை
ஆனாலும்பாவிகள்தா னந்தரங்கஞ்சொல்லவொண்ணா

சூரியனைத்தோத்திரியாத் தோஷமதனாலும்
நீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுச்சுட்டதினால்

மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
குடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால் ௲௫௭

நல்லநிழல்மரத்தை நாருரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சைமரங்கள்தனைவெட்டினதால்

பசித்தோரிருக்கவரைப் பாராமலுண்டதினால்
நிசமாய்ச்சுரதோஷங் நேருமெனவேயுரைத்தார்

மாதாபிதாவைமனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால்

வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென் றுபல ரைவரையுப்பழித்தல்

தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்

ஊனதைத்தின்ன உயிர் தைகள்செய்வதினால்
மானுக்கற்பழித்துப்பூமரங்கள்தனைவெட்டினதால்

புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துந்
தண்ணீர்துளைமேறி தன்னையுரைத்துவிட்டும்

நிழுப்பதளப்பதுவும் நிரைகள்துறையவிற்றும்
மறுபபடாகீரில் மலமூத்திரங்கள்விட்டும்

தூராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோபர் பொய்யேமிகுந்துரைக்குஞ்
சொல்லுவதைபின்மறுத்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
திண்டுமிண்டாச்சீதசெந்தை திரைக்கவேகொன்றவர்க்கும்

கன்னத்திற்புத்துகன்டே சிவிப்புருகி
கன்னத்திற்சூலை கடிதானமல்லாணை

தந்தரோகங்கள் சசிக்கரியாவாய்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமனவந்திடுமாம்

சற்குருவைதூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரவதனைப் பங்கமுறவெட்டினோர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலே காயுதிரவடித்தவர்க்கும்

வண்டுகடிகாரப்பண் மகக்கானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்

வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தாற்சிவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்

காங்கிசையாப்பெண்கள்தமைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கியவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

மின்னாரைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்னவரைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும்

தப்பிதமாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும்

பலதரமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பார்த்திருந்த வேட்டைநாயானவர்க்கும்

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதான்மறையும்
தொண்ணூற்றியாறுநோய் தொடருமென்றார்மாமுனியும்

பேறானதேதுமுயிர்ப் பிராணிதனைத்தான்பிடித்து
கூறாகத்தூக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்து
சிவசெந்தைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலறும்பிராணிகளை யமுக்கியதன்னுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும்

ஈனமிறக்கமற்ற யிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாழ்வுவந் தழுக்குமெனவுரைத்தார்

திறந்தவேமுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்திடுசெய்து மயக்கிக்கர்ப்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலவளும்
சயரோகமாகவந்து சார்குவாளெனவுரைத்தார்

மார்க்கமதில்நிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூக்கமழுநல்மரத்தின் புறத்தொளியைத்தானுரித்தோர்

வீணிலேபூநிகளை விருட்சங்களைமுறித்தோர்
ஊணுகின்றகால்முறித்தே யோடாமற்செய்தவர்கள்

தம்பமாய்ச்சிவசெந்தின்சங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துங் கொடும்பாவம்செய்தவற்கு
வாசங்களவந்து வழங்காமற்கால்கைகள்
கூனுடனருளிங் குளிரும்வருமென்றனரே
பலபேர்வயிரெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நடுநடுங்கப்பேசினர்க்கும்
மாறுமனக்கவடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலபசிக்கவுண்டவர்க்கும்
சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துசூழுமென்றார்
பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால விலங்கவர்க்கேயெய்துமென்றார்
சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டைகளை
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை

வெடுக்கென்றசொல்லானை மேலோதத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்தொப்பாம்
எண்ணுமவ்வஞ்சகப்பெண் ணின்றசொல்லைநிச்சயித்தால்
மண்குதிரைதனைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்
அகாமியமுள்ளரெனினு மறிவாளறைசேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த மானதனைநிகர்ப்பார்
தன்னவரேயானாலுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடாவிளக்கெனினுந் தூண்டுகோலவேணுமதாம்
கடவுள்விதிவெல்லக் கடவரெவராருமில்லை
மடலிலேயிட்டாக்கால் குடலிலேதாங்காதே
நிலையாமநிமலனடி நேர்ந்தாக்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ
பெரியோர்திருவுளந்தான் பேதித்தலார்தீர்ப்பார்
கரிமஞ்சாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ
கடந்தேவருஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கிலசற்றுமொருவோசைபரியாதே
மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துச்சொன்னாலும்
இட்டமுற்றதன்குணமும்போர்செய்யாதுநற்குணந்தான் தாரு

குடையாரால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
மூடப்புல்லுதண்ணீரில் முக்கலத்தையழிக்கும்

வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சவரே
மலையேதான்லெக்கானுல் குருடனெய்யாட்டானே

தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லை தாழ்வுவந்தால்
புலிக்கடுமைப்பட்டுக் கறிக்காசைபட்டதொக்கும்

மெலிவாகினுமேலோர் மேற்செயலேசெய்வார்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாதே

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே தாய

நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையாவாறாகும்

ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதாமுண்டோ

எட்டாக்கனிபதனுக் கோராசைபட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுப்போட்டால்வருமோ

நாட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டிறலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றிருந்தால்
ஏறவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறாகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நிலையா
ஏழைசொல்லம்பலமேறாதுகண்டீரே

கொடையாளிபேவறுமைக் குள்ளாகினுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமறுபோகாதே

விற்பனக்குருமூடன் மேலாம்பரமானல்
குப்பையுயர்ந்துகோபுரமுந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புகல்புங்காலம்
கெட்டவாக்குற்றோர் கினைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குரைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும் ௩௱௨௰

காலிபயிர்தின்னாமற் காப்பதுவேவேலியுமாம்
வேலியயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

நிலையானகாரியமு நில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தல்லவே

கூடாவொழுக்கமகளிர்

பார்ப்பளவில்திரும்பிப் பாராணுரைத்தமொழி
கேளாய்மருவிகள் மேதுவுமேசொல்லாளாம்

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்காருடன் போயுஞ்சண்டைசெய்வாள்

ஆடையுடனாபரண மடைக்காய்முதல்கொடுத்தால்
நாடாள்புறங்கையி னாலதனைத்தட்டுவாளாம்

அங்கையாற்றெட்டா லாடவரம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைப்போல்பார்ப்பாள்

அவரொருடனே விளையாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தால்

மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டுப்
பொய்யாணைவிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்

முந்தியுறங்கிப்பெரு மூச்சிவிட்டுயெத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிறங்காள்

ஆடிடத்திற்போடாவென் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள் ௩௱௩௰

காடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலுங்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

அபிபுற்றமகளிர்.

ஆடவர்களெந்நாளு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பாணைச்சொல்லுகிறோம்

பலரோனூடாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துயேசிரிப்பாள்

உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சிவிடாள்
தள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிடாள்

பாங்கியரைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்த்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி

பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி

தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யன்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்தொழிலையுமகிழ்ந்து

ஆணாடவன்விட்டுக் கடிக்கடிதான்போதல்லால்
ஆண்டவனைக்கண்டா லறக்கணிசிநாணுதலும்

கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூறுகளில முனைவோருரைத்தனரே

பெண்களுடையதத்துவம் பத்துக்கும்விபரம்.

மிக்கயின்னூலில் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண்கள்பத்துதத்துவத்தைச்சொல்லுகிறோம் தூாசமி

பொன்னிறமும்மல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்முகமு மாசற்றவமுர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடும்வாழ்பவ ளிவள்தெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேகானதர்மந் தெய்வவிசுவாசம்

வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்க்குள்தத்துவமாய்
முன்சொல்லும்நூலதனில் முறையினுரைத்தனரே

நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி வீடெல்லாம்போய்த்திரிதல்.

சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாப்போசனமும்
நக்துகின்றமின்னாள்* நரகதத்துவமாகும்

ஆற்றில்குளத்தி லலைகடலிலேமலையி
லேற்றமிகும்பெண்களுட னென்றும்விளையாடமனம்

நாணமில்லாமலை வெட்காளுக்கொண்டிகோபம்
வாணுதலாளேயிபக்க மாமென்றுசொல்லுவதாம்

பரிமளசுகந்தாதி பகிரத்தினவாபரணம்
சரசசங்கீதவித்தை கண்ணில்வெகுவிருப்பம்

சார்ந்ததினமுந் தர்மசிந்தைகற்புடையாள்
காந்தர்வதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம் தூளுடு

வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமுந்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்

ஊட்டினசரீர முடையழுக்குமாமிசமு
முட்டமதுவுண்ணல் முறைமையில்லாதுர்நடத்தை

நித்திரையில்லாமையிவை நேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிக்கண்ணு மழுக்குசற்றுமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்

மாறுபாடானமன மல்லுகட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சகரின்தத்துவமாம்

ஆரிடத்திலானாலு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தால் மயிர்தூவுந்தூறுதலை

வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தில் கன்னியவளாகுமென்றார்

கூடுகின்றவாடவரை கூர்நகத்தாற்பல்லதனால்
சாடிக்கடிப்பதுவு நாணஞ்சற்றுமில்லாமை

நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்டல்
குரங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றார்

தின்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
சண்டிவெடுத்தகுரல மல்லுகட்டிப்புணர்தல் தூகூடு

மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்பாள்

வையகத்திலேமலர் மணவாளன்சொன்னபடி
மொய்க்குழலார்சாதி மூன்றினகுறியுரைப்போம்

மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமுந்
தேனைநிகர்த்தமொழி தேமற்படர்ந்தவுடல்

சுருண்டுநெறிந்தகுழல் தும்பிப்பிடைநடையுந்
திரண்டகோவைகனிவாய் செண்பகப்பூந்தேகமுமாய்

மின்னிடையுங்கூந்தன்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்
இட்டமுறுகல்விக் கிசைந்திட்டசற்குணமும்

தர்க்கமிடுமின்கோபி சாப்பாடுமேற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுளமான்சாதி

பெங்கைக்குதிரைசாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சி யுட்குழிந்தகண்றகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதடுபெருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருததுத் தாழிபோலேவுயிரும்

அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பணைந்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம் தகைவி

போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்

தீராவெறுப்புஞ் சிவந்தபருவுடனுங்
கூறுணமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்வினரே

பிடியானைச்சாதி,

சாலப்பருந்தநெற்றி த்ரடைசெவிநாசி
காலுடனேகைதோளுங் கழுத்துமிகப்பருத்து

சுருண்டுசிவந்தமயிர் தொங்குமதாமுமா
முரண்டுதஞ்சண்டை மொழியுமிடிபோலாய்

அல்லும்பகல்கல்வி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை

யார்க்குமனுகூலி யானைமதநாரி
பார்க்கும்பணிமண்டு அங்குலமாமல்குலது

விடிளைவுஞ்சண்டைவிடாள் வெட்கசத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினார்முன்னோர்கள

இன்னம்சிலநீதி யெடுத்துமேகூறலென்றால்
வன்னமாயிந்நூல் வளருமெனமுடித்தேன்

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி

தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி,
நேயசெங்கோல்செலுத்தும்நிருபர்மிகவாழி

கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே

மனுநீதிகாதல்
முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அட்டவணை.

—— (*) ——

மனுநீதிகாதலின் அட்டவணை.

முற்றிற்று,

௨

கடவுள் துணை.

அறிக்கை.

இவ்வுலகின் மாட்சிமைதங்கிய தேசர்களே முன்னோர்களாலுண்டான நீதிநூல்களிற் சொல்லியசாரங்களைத் தெளிந்தெடுத்துச்சகலருக்கு முபயோகமாகும்பொருட்டுச் செய்யுளாகவியற்றி மனுநீதிகாதலென்று பெயர்கொடுத்திருப்பதால் இந்நூலை இந்நாட்டிலுந் தென்னாட்டிலுந் தென்னாட்டிலுமுள்ள தமிழ் பாடசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குக் கற்பிப்பார்களாகில் நீதிகளை எளிதிலறிவார்கள் வேறு நூல்பார்க்கவேண்டுவதில்லை இதன்றிகற்றவர்களும கனவான்களும் தனவான்களும் இதைப்பார்வையிட்டால வெகுவிஷயங்களை எளிதிலறியலாம்.